"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக்காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்" [illegible]தாபிதம் : 1876

# சத்தியவேத பாதுகாவலன்

தந்தி : "கதலிக் பிறஸ்" யாழ்ப்பாணம் தொலைபேசி : 300

REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.


### ஒரு வேண்டுகோள்

பாதுகாவலனின் சந்தாதார அன்பர்கள் தங்கள் சந்தாக்களைப் புதுப்பித்துக்.கொள்ளுமாறு விநயமாகக் கேட்டுக்கொள்ளுகிறோம். பலபங்குகளிலும் எங்கள் பிரதிநிதிகளாகப் பத்திரிகைகளை விநியோகித்து வரும் அன்பர்களும் தங்கள் பாக்கிப்பணத்தையெல்லாம் உடனே செலுத்திவிடுமாறும் தயவாகத் தெரிவிக்கின்றோம். பத்திரிகையின் வளர்ச்சிக்கு இவைமிக அவசியமானவை.

நிர்வாக ஆசிரியர்

87-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1962-ம் ஆண்டு மார்கழி மீ 1-ந் திகதி சனிக்கிழமை — பிரதிசதம் 10 | 48-ம் இலக்கம்

### வத்திக்கான் சங்கம்



# தேவதிரவிய அனுமானங்களில் சுயதேசப் போக்கு உருவாகிறது

தேவதிரவிய அனுமானச் சடங்குகளும், அனுமானிய ரீதிகளும் சுயதேசப் போக்குள்ளவைகளாயிருப்பது மிகவும் விரும்பத்தக்கது என்ற கருத்து பொதுச் சங்கத்தில் அதிகமதிகம் உறுதியாக உருவாகிக்கொண்டு வருகிறதென நாகபுரி அதிமேற்றிராணியார் டிசூசா ஆண்டகை ரோமையில் நிருபருக்குப் பேட்டியளிக்கையில் கூறினர்.

நாட்டுப்புறங்களில் வசிக்கும் மக்கள் பலருக்கு நடைமுறையிலிருக்கும் மெய்விவாகச்சடங்குகள் அர்த்தமற்றவை. சில இடங்களில் திருச்சபைச்சடங்குகளுடன் சுதேச வழமைகளும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. உதாரணமாக, சிலஇடங்களில் மாப்பிள்ளையின் வேஷ்டித்தலைப்பையும், பெண்ணுடைய சேலைத் தலைப்பையும் விவாகபந்தனத்தின் குறிப்பாக முடிந்துவிடும் வழக்கம் கைக்கொள்ளப்படுகிறது.

தமது மாகாணத்திலுமுள்ள மேற்றிராணிமார் வடஇந்தியாவில் கைக்கொள்ளப்படும் வழக்கங்களில் எவை திருவழிபாட்டில் உபயோகிக்கப்படலாம் எனும் ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கிறார்களென அதிமேற்றிராணியார் டிசூசா தொடர்ந்து கூறினர். தேவதிரவிய அனுமானங்கள் வழங்குவதில் அவ்வத்தேச மொழியை உபயோகிப்பது அவசியம். பூசையில் போதகப்பகுதியையும், செபங்களையும் சுதேசமொழியில் நடத்துவதைக் குருமார் பெரிதும் விரும்புகிறார்கள்.

கத்தோலிக்கர் அல்லாத அவதானிகள் சங்கத்தின் போது கண்ட, கேட்டவைகளையிட்டுப் பெரிதும் மகிழ்ச்சிகொள்ளுகிறார்கள். தாராளமான விவாதங்கள் நடைபெறுவது திருச்சபையையும், பிற கிறிஸ்தவ சபைகளையும் இணைப்பதற்கு ஏதுவாகிறதுஎனவுங் குறிப்பிட்டார்.

## பூசைப்பலியில் அர்ச். சூசையப்பரின் நாமம்

இம் மார்கழிமாசம் 8 ஆம் திகதி தொடக்கமாக அர்ச். சூசையப்பரின் நாமம் திவ்வியபூசைப்பலியின் பிரதான பகுதியில் தேவஅன்னையின் பெயருக்குப்பின்னால் சேர்க்கப்பட வேண்டுமென்று பரிசுத்தபிதா கட்டளையிட்டிருக்கிறார். இத்தீர்மானம் சங்கப்பிதாக்களுக்கு அண்மையில் அறிவிக்கப்பட்டது.

பாதுகாவலனின் பரலோக பாதுகாவலரான அர்ச். சூசையப்பரின் நாமம் திவ்வியபூசையின் முக்கியபகுதியில் இடம்பெற்றமை குறித்துப் பெருமகிழ்வு கொள்ளுகின்றோம்.

## பொதுச்சங்கம்பற்றி லூதரன் குரவர்

வத்திக்கான் வானொலிநிலையம் லூதரன் சபைக்குரவரான மாக்ஸ்லக்மன் அவர்களை அண்மையில் பேட்டிகண்டு அவரது கருத்துகளை ஒலிபரப்பியது. பிரிவினைச்சபை ஒன்றின் முக்கியஸ்தரான மாக்ஸ் லக்மன் அவர்கள் இப்பேட்டியில் வத்திக்கான் சங்கம் கீழ்க்காணும்முக்கியமாறுதல்களைத் தீர்மானிக்கும் எனக் கருத்து வெளியிட்டுள்ளார்.

1. பூசைவேளையில் பிரசங்கட்கு முக்கியத்துவம் கொடுப்பது.

2. இல்லறத்தவர்கள் பூசையில் முன்னிலும் அதிகமாகப் பங்குகொள்வதற்கான ஏற்பாடுகள் செய்தல்.

3 அந்தந்த நாட்டு மொழிகட்கு பூசையில் அதிக முக்கியத்துவம் கொடுத்தல்.

4. சடங்கானுசாரங்களில் அந்தந்த நாடுகளின் கலாசாரங்கள், கொள்கைகட்கிணங்க சிறுமாற்றங்கள் செய்வதற்கு அப்பகுதி மேற்றிராணிமார் சேர்ந்து கூட்டும் சங்கங்கட்கு அதிகாரம் அளித்தல்.

5. கலப்புத்திருமணங்கள் பற்றிய பிரச்சினைகளில் சுமுகமான தீர்மானமெடுத்தற்குரிய வண்ணம் சட்டவிதிகளை இலகுவாக்கல்.

6. மேற்றிராசனங்களிலும், விசாரணைப்பங்குகளிலும் எழும் விவகாரங்கள் சம்பந்தமாக இல்லறத்தோர் அடங்கும் குழுக்கட்கு அதிக முக்கியத்துவம் அளித்தல்.

மாக்ஸ் லக்மன் அவர்கள் லூதரன் சபையின் அவதானிகளில் ஒருவராக வத்திக்கான் சங்கத்தால் கலந்துகொள்கிறார்.

## அர்ச்சியசிஷ்டர் வரிசையில் புதிய புனிதர்கள்

மார்கழி 9-ஆம் தேதியன்று பரிசுத்த தந்தையவர்கள் அர்ச். இராயப்பர் மகாலயத்துக்கு எழுந்தருளி முத். பிரான்சிஸ் கூரேயசி, முத். அன்னி பௌசி, முத். பீற்றர் எய்மாட் ஆகிய புனிதர்களைத் திருச்சபையின் அர்ச்சியசிட்டர்களாகப் பிரகடனம் செய்வார். அடுத்துவரும் தைமாதம் 20-ந்தேதியன்று முத் வின்சென்ற் பாலொட்டிஎன்ற புனிதரும் இக்கௌரவத்தைப் பெறுவார்.

● முத். பிரான்சிஸ் கூரேயசி ஒரு இத்தாலியர். கப்புச்சின்சபையைச்சேர்ந்த இத்துறவி 1866-ல் காலமானார்.

● முத். அன்ரனி பௌசி இத்தாலிய குரவராவர். அவர் 1892-ல் இறைவனடி சேர்ந்தார்.

● நற்கருணையின் புனிதர் என்ற சிறப்புப்பெயரால் அழைக்கப்பட்ட பிரான்சிய குரவர் முத். பீற்றர் எய்மாட் 1868-ல் காலமானார்.

## சர்வதேச மேற்றிராணிமார் நிர்வாகம்

கத்தோலிக்க மக்களுடைய கருத்துக்களைத் தொகுத்துக் கூறக்கூடிய சர்வதேச மேற்றிராணிமாரைக்கொண்ட நிர்வாக சங்கமொன்று வத்திக்கானில் ஏற்படலாம் எனத் திருச்சிலுவைச்சபைக் கருமாதிகாரி வண. எட்வேட் ஹெஸ்ரன் சுவாமியார் கூறுகின்றார். இது அசம்பாவிதமல்ல எனப் பாப்புவும், திருச்சபை நிர்வாகக்குழு அங்கத்தினரும் அபிப்பிராயம் தெரிவித்தனர்.

வத்திக்கான்சங்கம் தற்போதைய நிர்வாகமுறையை மாற்ற அதிகாரமற்றதெனினும் பாப்பு விரும்பின் சீர்ப்படுத்தப்பெறும். சங்கம் விரும்பிய சில சிபாரிசுகளை முன்வைக்கலாம். நிர்வாக ஆணையாளர் தற்பொழுது பார்க்கும் சிலகருமங்கள் மாவட்ட மேற்றிராணிமார் சங்கத்தின் அதிகாரத்துக்கு விட்டுவிடலாம்.

திருச்சபையின் நிர்வாகசபை அங்கத்தினர் பல்வேறு தேசத்தவராகத் [illegible] றனர்.

## அரமையிக் மொழிப் பூசை

பொதுச்சங்க விவாதம் சென்ற வாரம் ஆரம்பித்தபோது மரோனைற் ரீதியில் பூசை ஒப்புக்கொடுக்கப்பட்டது. கிறிஸ்துவின் சீடர்கள் "கிறிஸ்தவர்கள்" என முதல் அழைக்கப்பட்டதும், அர்ச். இராயப்பரின் முதல் ஸ்தானமுமான அந்தியோக்கியாவில் இந்த ரீதி ஆரம்பமாகியது.

இந்த ரீதியில் கர்த்தர் தாமே பேசியதும், சீரியாவிலுள்ள அரபு மக்கள் பேசுவதுமான அரமைக் மொழி உபயோகிக்கப்படுகிறது. யேசு பாஸ்காப்பண்டிகையில் பாஸ்காவிருந்தை நடத்தியபொழுது அசனசா[illegible]யில் உபயோகித்த மொழியு[illegible]சடங்குமுறைகளும் முதன்மு[illegible]ாகச் சம்பேதுரு பேராலய[illegible] நிறைவேற்றப்பட்[illegible] என்[illegible]து குறிப்பிடப்[illegible]

### அந்தகரான குரவர்

முப்பத்திரண்டு வயது நிரம்பிய இருகண்களையுமிழந்த அன்சலேமோ பிறேயெசிஎன்ற நவசந்நியாசி அண்மையில் குருத்துவாபிஷேகம் பெற்றார். இவர் றையோடி சனரோவைச் சேர்ந்தவர். குருத்துவ பயிற்சிக்கழகத்தில் பயிற்சிபெற்றுக்கொண்டிருக்கும்போது இவர் கண்பார்வையை இழந்தார். பின்னர் மற்றவர்கள் சொல்லிக்கொடுப்பதைக் கேட்டுப் பயின்றவண்ணம் தமது பயிற்சியைத் தொடர்ந்தார். அவரை அபிஷேகம் செய்வதற்காகப் பரிசுத்த பாப்பரசர் விசேட உத்தரவொன்றை வழங்கியுள்ளார்.

பிறேசில் தேசத்தில் அந்தகரொருவர் அபிஷேகம் பெறுவது இது இரண்டாவது தடவையாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# "வருக ஆண்டவரே! எம் யேசுவே சீக்கிரம் வருக!"

## திருவருட ஆரம்பம்

K. S. பிள்ளை.

'ஊருடன் ஒத்துவாழ்' என்பது முதுமொழி மட்டுமல்ல, அது ஒரு குறள் மொழியும். இன்று ஊரெங்கும் புத்துயிர் மயம். வயல்களில் வளரும் பயிர். வெளிகளில் பசும்புல். மரங்களில் காய்த்துக் குலுங்கும் கனிகள். குளம் குன்றுகளில் நிறைவெள்ளம். சில வாரங்களின்முன் ஊரின் வரட்சியால் வாழ்வே வரண்டுபோகக் கண்ட மனிதன் திரும்பவும் மனதில் புத்தொளியும், உள்ளத்தில்புத்துயிரும் கொண்டு தலைநிமிர்கிறான். வரட்சியும் சோர்வும் வாழ்க்கையின் மார்க்கம்; காலத்தின் சக்கரம். புதுவருடத்தையும், புதியதொரு வாழ்வையும் எதிர்பார்க்கிறான். இது இன்றைய ஊர் நிலை. இதே நிலையில் திருச்சபையும் தன் புதுவருடத்தை ஆரம்பிக்கிறது. சாவையும், தீர்வையையும் பற்றி எண்ணியெண்ணிப் பார்த்த பின்—திரும்பவும் புதுவருடச்சக்கரத்தால் புதுவாழ்வையும், புத்தொளியையும் எதிர்நோக்கி ஆனந்தம் கொள்ளுகிறது.

ஆன்மவாழ்வை, பக்திச் சுடரை வளர்த்துவரும் தாய் திருச்சபை. ஒவ்வொரு ஆன்மாவும் இறைவன் பதம் பூண்ட அன்பையும், ஆசையையும், அடிமைத் தன்மையையும் வெளிப்படுத்தும் முறைதான் இறைவழிபாடு (Cultus). பிறந்த தினத்தன்று அல்லது புதுவருட தினத்தன்று தந்தைக்கு மகன் அளிக்கும் அன்பளிப்பு அவனது அன்பின் வெளிக்காட்டல் இது பெற்றார் வழிபாடு. தனிப்பட்ட முறையில் விரும்பிய விதத்தில் இறைவனை வணங்கி அவனோடு இணைவதைத் தனிவழிபாடு (Cultus Personalis) என்றும் திருச்சபை என்னும் கிறீஸ்தவசபையாரோடு ஒன்றுசேர்ந்து அதன் அதிகாரிகளால் அங்கீகரிக்கப்பட்ட முறையிலும், மொழியிலும், நியமிக்கப்பட்ட குருப்பிரசாதிகள்மூலம் பொதுவில் இறைவனை வணங்கி, அலங்கார—ஆடம்பரம் பொருந்திய சடங்குகளால் ஆராதனை செய்தல் பொதுவழிபாடு (Cultus Publicus) என்றும் அழைக்கப்படுவது வழக்கம். பொதுவழிபாட்டின் சிறந்த எடுத்துக்காட்டு **திவ்விய பூசைப்பலி.**

கடுகைத்துழைத்து கடலைப்புகுத்திய வண்ணம் திருவாராதனை, தெய்வ பக்தி, இறைவணக்கம், நன்றித் துதி, மன்னிப்புக்கோரல், சகாயம் வேண்டுதல் முதலிய சகல வழிபாட்டிற்கவசியமான முயற்சிகளையும் உட்புகுத்திக் குறுகத் தைத்துள்ளது திவ்விய பலிப்பூசை. அதுமட்டுமல்ல கிறீஸ்துவின் வாழ்க்கைச் சரிதத்தையும், அவரது போதனைச் சுருக்கத்தையும், ஈடேற்றத்தின் பரமஇரகசியத்தையும் சுருட்டி அமைத்துள்ளது திருப்பலி. தேவன் என்றும் எம்முடன் நின்று தம் அருளை அள்ளி இறைக்கும் ஆழ் சமுத்திரம் இது. இப்பலியைத் தனது ஒருமனப்பட்ட பொதுவழிபாட்டின் கொடுமுடியாகக் கொண்டுள்ளது திருச்சபை. கிறீஸ்துவின் ஞானச் சரீரம் தனது தலையாகிய கிறீஸ்துவின் திருக்கரங்களால் பிதாவுக்குச் செலுத்தும் உன்னதசெபம் — பூசைப்பலி தவிர வேறுயாது?

இப்பொது வழிபாட்டைத்தான் கிறீஸ்தவ உலகம், சிற[ப்]பாகத்தமிழ் நாடு இறைவழிபாடு அல்லது திருவழிபாடு என்றும், தனிவழிபாட்டை பக்தி அல்லது ஞானமுயற்சிகள் எ[ன்]றும் அழைக்கப்பழகிவிட்டது.

இப்பூசைப்பலி எம் சிந்தனைக்கினை மேற்கொண்ட ஒரு திவ்வியபலி. எனவே இச்சுருளை விரித்து, ஆராய்ந்து, தியானத்தில் அமர்ந்து ஆன்மபாலைப் பருகவேண்டுமானால், ஒருவனின் வாழ்நாள் முழுவதும் வெகுசொற்பம். இங்கு வேதநாயக அடிகளின் பாட்டுப் பொருத்தமாகும்.

"உன்னிட உன்னிடத்தித்திக்கும்
நெஞ்சம்—உருகி நிதம்,
பன்னிடப் பன்னிடத்தித்திக்கும்
நாவு—பழுதறவே,
மன்னிட மன்னிடத்தித்திக்கும்
காது—வளர்தவத்தோர்"
முன்னிட முன்னிட இன்பம்
உதவு முதல்வனையே.

(திருவருள் அந்.)

இருந்தும் மனிதனைக் கரைசேர்ப்பது திருச்சபையின் தலையாய கடன். அவனைப் பக்தியில் வளர்த்து பரகதி சேர்த்தல் அதன் பொறுப்பு. இரட்சகரின் சீவியத்தைத் தினமும் மாதமும், வாரமும், வருடமும் அயராது சிந்தித்து, அரும்பெரும் புண்ணியங்களைப் பின்பற்றி அருட்தேனை அருந்தி வருவதற்கு — ஒருவருட காலத்தை திறம்பட வகுத்து அமைத்துள்ளது.

பெத்லேமில் கிறீஸ்துவின் வறுமையான பிறப்புடன் தொடங்கி கல்வாரியில் எளிமையான இறப்புடன் முடிவடையும் திருவருடம், "அகரமும் ஆயுதமும் எழுத்துக் கெவ்விதமோ, அவ்விதமே ஆதவா எம்மினத்துக்கு நீ..." என்ற மெட்டை இனிமையுடன் தினமும் பாடச்செய்கிறது இதுதான் திருச்சபை தந்த திருவழிபாட்டின் **திருவருடம்.**

இவ்வருடம் இரண்டு பிரதான காலங்களைச் சுற்றிப் பொருத்தப்பட்டிருக்கிறது. கிறிஸ்மஸ் காலம், பாஸ்கு காலம். நிகழும் 1962-ம்வருடம் மார்கழி 2-ம்நாள் ஞாயிறு தினத்தில் கிறிஸ்மஸ் விழாவிற்கு முஸ்திப்புசெய்யும் "**ஆகமனகாலம்**" ஆரம்பமாகின்றது. இதைத் தெளிவாக வருகைக் காலம் எனலாம். யார் வருகை? அகில உலகும் ஏகமனதால் எதிர்பார்த்த இரட்சகரின் வருகை. நமது வரட்சியுற்ற ஊர் இன்று வளர்ச்சியையும், குளிர்ச்சியையும் எதிர்பார்ப்பதுபோன்று, தளர்ச்சியுற்ற ஆன்ம சீவியம், திரும்பவும் புத்துயிர்தரும் இரட்சகரின் வருகையை ஆவலாய்க் காத்திருக்கிறது.

எமது திருவிழாக்களுள் மாபெரும் திருவிழா கிறிஸ்மஸ்விழா. இயற்கை மாதா எமக்கு எழிலும் வளமும் பொருந்திய நாட்டையும், வீட்டையும் தந்ததுபோல், தேவமாதாவும் தமது "திருஉதரத்தின் கனியாகிய யேசுவை' அருளிச்செல்ல ஆயத்தம் செய்கிறு. இப்படியே ஆகமனகாலம் நம்மை நத்தால் தினத்திற்கு ஆயத்தம் செய்கிறது. அதன்பின் மூவிராசா தினத்தில் இரட்சகரின் உலகதரிசனம். இத்துடன் திருவருடத்தின் முதல் காலம் முடிந்து, இரண்டாவது காலம் ஆரம்பிக்கிறது. இது தபசு காலத்துடன் ஆரம்பித்து, இரட்சணிய அலுவலை முடித்து, இரட்சகர் பரலோகம் எய்தியபின் ஆவியான இஸ்பிரீத்துசாந்துவானவர் இறங்கிவரும் காலத்துடன் முடிவடைகிறது.

ஒவ்வொரு திருநாளும், கிறீஸ்துவின் பரமஇரகசியத்தை கிறீஸ்தவர் கண்முன் வைக்கிறது. சிலுவையின் நான்கு சட்டங்களையொப்ப, வழிபாட்டு வருடத்தின் ஒவ்வொரு விழாவும் தன் உட்பொருளை நான்கு காட்சிகளில் வெளிப்படுத்துகிறது. நான்கு பொருட்களைக் குறிப்பிடுகின்றது. எடுத்துக்காட்டாக:

**1. இறந்த[illegible] நிகழ்ச்சி:** கிறிஸ்மஸ்காலம் கி[illegible]வின் முதல்வருகையையும், பெ[illegible]மில் வார்த்தையானவர் மாமிச[illegible]னதையும்,

**2. நிகழ்கால நிகழ்ச்சி:** [illegible] இந்த வருகையின் பயனாகப் பொழியப்பட்ட அருள் இன்றும் பொழிந்து கொண்டிருப்பதையும், ஞானவிதமாய் எம்மத்தியில் வருவதையும்,

**3. எதிர்கால நிகழ்ச்சி:** இவ்விரண்டு நிகழ்ச்சியும் நாம் எதிர்பார்க்கும் இன்னொரு மகா முக்கியமான நிகழ்ச்சியையும் நமக்கு காண்பித்து, இப்போது இவ்வேளையில் தேவையான தேவஉயிரை எமக்கு வழங்குகிறது. மகிமைப்பிரதாபமுள்ள மூன்றும் வருகையை, நமக்குக்காட்டி அதற்கு ஆகவேண்டிய ஆயத்தம் செய்யத் தூண்டுவதுதான் நாலாவதுகாட்சி.

**4. அறவாழ்வை ஏற்றமுறையில் அமைத்தல்:** கிறீஸ்துவின் மூன்றுவித வருகையும் நம்மை மனந்திரும்பி ஆயத்தமாயிருக்கும்படி செய்கின்றன. இதுதான் ஆகமனகாலத்தின் கருத்து. இக்காலம் நம்மீட்பரின் வருகைக்கு வழிவகுக்கும் காலம். மனதில் மகிழ்வு மலரும் காலம். நம்பிக்கை நல்கும் காலம். இதெல்லாம்பெற நமது பிரயாசை அவசியம். மனந்திரும்பி இரட்சகருடைய வருகைக்குத் தயார்செய்ய வேண்டும்.

"மனந்திரும்புங்கள் ஏனெனில், கடவுளின் அரசு அண்மையில் உள்ளது" என்று எம்மை அழைக்கிறது திருவழிபாடு.

"ஆண்டவரின் வழியைத் தயார் செய்யுங்கள்; அவர்பாதைகளை நேராக்குங்கள்... அப்போது மனித இனம் முழுவதும் கடவுளின் மீட்பைக் காணும்" (லூக், 3; 4-6).

இதுதான் வழிபாட்டு வருடத்தின் முக்கிய நோக்கம். வரலாற்று நிகழ்ச்சியொன்றை நிகழ்காலத்தில் உயிர்ப்பித்து வருங்கால மாபெரும் நிகழ்ச்சியை நினைவூட்டி இன்றைய அறவாழ்வை இனிதே இயக்குவது.

சகலவித வழிபாட்டின் கிரீடமும், பக்திவாழ்வின் முக்கிய சக்தியும் திருப்பலியிலே தான் காணப்படும். பலவகையான, தொகையான செபங்களும், திருவசனங்களும், வேதாகமவாக்கியங்களும் திருப்பலியை அணி செய்கின்றன. உள்ளக்கிடக்கை வெளிப்படுத்துகின்றன. அத்துடன் சகலவித பெருநாட்களும், திருவிழாக்களும் இதே பலியுடன் ஒன்றுக இணைக்கப்பட்டிருப்பது, இப்பலியின் முக்கியத்துவத்தை விளக்கும்.

"வருக ஆண்டவரே! எம் யேசுவே சீக்கிரம் வருக!"

## மேற்றிராசனங்கள் தரும்செய்தி

### ● கல்கமுவா

"மனிதன் தனக்காக வாழமட்டும் பிறந்தவனல்ல. பிறர் நலத்திற்காக வாழ்வதும் அவனது பிரதான இலட்சியமாக இருக்கவேண்டும்" என்று கடந்த சனிக்கிழமை காலை 10 மணிக்குக் கல்கமுவா கிராமமுன்னேற்ற சங்கத்தினதும்—சனசமூக நிலையத்தினதும் அங்குராப்பணப் பொதுக்கூட்டத்தில் தலைமைவகித்துப்பேசிய கல்கமுவா உரோமன் கத்தோலிக்க சிரேஷ்ட தமிழ்க்கலவன் பாடசாலைத் தலைமைஆசிரியர் திரு. வீ. எஸ். பிள்ளையவர்கள் குறிப்பிட்டார்.

பாடசாலை மண்டபத்தில் நடைபெற்ற மேற்படி கூட்டத்தில் திரு. எஸ். ஞானப்பிரகாசம், ஏ. சந்தியாப்பிள்ளை, எஸ். செபஸ்தியாம்பிள்ளை ஆகியோரும் பேசியபின்னர் நடப்பு வருட உத்தியோகத்தர் தேர்வில் போஷகராக பங்குக்குருவானவர் வண. பிதா நிசங்க அவர்களும், தலைவராக தலைமைஆசிரியர் வீ. எஸ். பிள்ளையவர்களும், உபதலைவராக திரு. ஜே. லூயிஸ்பிள்ளை அவர்களும், மற்றும் உத்தியோகஸ்தரும் தெரிவுசெய்யப்பட்டார்கள். பின் தலைவரின் நன்றி கூறலுடன் கூட்டம் கலைந்தது.

—கிருபா.

### ● தாண்டவன்வெளி

மட்டக்களப்பு—தாண்டவன்வெளிப் பங்கைச்சேர்ந்த இளம் ஆணகளுக்கான இயக்கம் ஒன்றை இப்பங்குக் கட்டளைக்குரவர் அவர்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை 10-30 மணிக்கு ஆரம்பித்துவைத்தார். இவ்வியக்கம் தாண்டவன்வெளி கிளெனி ஆண்கள்பாடசாலையில் ஆண்கள் மரியாயின் சேனைத்தலைவர் சகோதரர் என். அன்ரனிதாஸ் அவர்களால் தலைமை தாங்கி நடாத்தப்பட்டது.

இயக்க ஆரம்ப உரையாக கட்டளைக்குரவரால், தற்கால அல்லோல கல்லோலங்கள், சமயவளர்ச்சியில் குறுகிய மனப்பான்மை, கீழ்ப்படிதலின்மை, ஆசாபாசங்கள், பொதுவுடைமை[illegible]ழக்கங்கள் என்பன பற்றி [illegible]படுத்தி இவைகளை நிவிர்த்திசெய்ய இளைஞர்களின் கண்விழிப்பு, மாறுத பரந்த மனப்பான்மை, தளராத விசுவாசம், கீழ்ப்படிதல் ஆகியவற்றை மேற்கோளாய் அனுசரிக்கப் பிரையாசைப்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டது.

தொடர்ந்து இவ்வியக்கத்தை மாதம் ஒருமுறை தளராது நடாத்த, செயலாளராக இப்பங்கு வாலிபர் மரியாயின்சேனைத்தலைவர் சகோதரர் எஸ். தவராசா அவர்களைக் குரவர் நியமித்தார். பின் அன்றைய விடயமாக "நேர்மையும் கீழ்ப்படிதலும்" பற்றி ஆசிரியர் திரு. பி. எம். யோசப் அவர்கள் சொற்பொழிவாற்றினர். ஈற்றில், செயலாளரது நன்றியுரையுடன் இயக்கம் இனிதே நிறைவாயது.

## நன்றியறிந்த ஸ்தோத்திரங்கள்

திருஇருதய நாதரிடமும், அமலோற்பவ கன்னிமரியாயிடமும், அர்ச். சூசையப்பரிடமும், அர்ச். அந்தோனியாரிடமும் நான் கேட்டுக்கொட்டதன்படி என்னுடைய கஷ்டங்களை நீக்கி, எனக்கு உத்தியோக பதவியைக் கொடுத்ததற்காக நேர்த்தியின்படி இதைப்பிரசுரிக்கிறேன்.

சூசை மாகிறேற்

புதுக்குடியிருப்பு.

* * *

எனது மகள் பிரசவத்தின்போது சத்திரசிகிச்சை செய்யப்பட்டுக் கடினவருத்தத்திற்குள்ளாகி டாக்டர்களால் கைவிடப்பட்டு மரணத்தருவாயிலிருக்கும் சமயம் கல்லறைஆண்டவரின் கருணையாலும், அர்ச். செபமாலைஇராக்கினி, அர்ச். சூசையப்பர், அர்ச். யூதாததேயு, உத்தரிக்கிற ஸ்தலத்து ஆத்துமாக்கள் இவர்களின் விசேஷ மன்றாட்டினலும் தாயும், குழந்தையும் காப்பாற்றப்பட்டார்கள். எனது நேர்த்திப்பிரகாரம் இதைப் பிரசுரிக்கிறேன்.

ஓர் விசுவாசி

கொழும்பு—13

* * *

யேசுவின் திருஇருதய இரக்கத்தினலும், பரிசுத்த சதாசகாயமாதா, அர்ச். அந்தோனியார், அர்ச். யூதாததேயு இவர்களின் கருணையாலும் நான்பெற்றுக்கொண்ட சகாயத்திற்காக நேர்த்திப்படி இதைப் பிரசுரஞ்செய்கிறேன்.

ஆர். எம்.

நுவரெலியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞாயிறுவில் நாம்

அமெரிக்கரும், ருஷியரும் சந்திர மண்டலத்தைப்பற்றித் திட்டமான தீர்வுகாணமுன், நான் ஏதோ சூரிய (ஞாயிறு) மண்டலத்துக்கு உங்களைக் கூட்டிப்போய் விட்டதாக எண்ணிவிடாதீர். ஆண்டவன் படைத்தான் அவனியை ஆறுநாட்களில். ஏழாம் நாள் ஓய்ந்திருந்து அந்நாளைப் பரிசுத்தமாய்க் கழித்தார் என்று ஆகமம் அறிவுறுத்துகின்றது. அதை அடிப்படையாகக்கொண்டே அன்புத்தாயாகிய திருச்சபையும் உத்தமர் உயிர்த்த நாளும், இஸ்பிரீத்து இறங்கிய நாளுமான ஞாயிறுவைக் கடவுளுக்குரிய நாளாகக்கழிக்க வேண்டுமெனக் கட்டளை பிறப்பித்திருக்கிறது. எனவே, இப்பொன்னான நன்னாளை எப்படி, நாம் போக்கவேண்டும் என்பதையிட்டுச் சிறிது ஆராய்வோம்.

"ஏழாம்நாளிலே உன்தேவனின் 'சபாட்' நாளாயிருப்பதால் அன்று நீயாவது உன்குமாரராவது, வேலைக்காரராவது, உன் மிருகஜீவன் அல்லது உன்வாயிலில் இருக்கும் அந்நியனென்கிலும் யாதொரு வேலையும் செய்யவேண்டாம். ஏனென்றால், கர்த்தர் ஆறுநாளுக்குள் வானத்தையும், பூமியையும், கடலையும், அவற்றிலுள்ள யாவற்றையும் படைத்து ஏழாம் நாளில் ஓய்வுகொண்டருளினமையால் அதை ஆசீர்வதித்துப் பரிசுத்தமாக்கினார்" (யாத். xx. 10–11).

இக்காலத்தில் ஞாயிறு அனுசரணை நம்மிடையே அருகிப்போய்விட்டது. சாதாரணமாய் வாலிபர், "மச்சான் நாளைக்கு ஞாயிற்றுக்கிழமை கோவிலடியில் சந்திப்போம்." காலை ஐந்துமணி முதற்பூசையில் உடல், இருக்கிறது உள்ளம் எங்கேயோ! (வெலிங்டன், மனோகரா...) பலி முடிந்ததும் முடியாததுமாகப் 'பஸ்' சைக்காத்துநிற்கிறது வாலிபர்குழு. பத்துமணி 'மெட்னி', அடுத்தது இரண்டுமணிக்கு. இதற்கிடையில் 'ஒட்டல்' உணவு அரைகுறையாய் உடலைநிரப்புகிறது. மீண்டும் புகைப்படலத்திடையே படக்காட்சி நடைபெறுகிறது. கூடுவிட்டுக் கூடுபாய்கின்றனர் தியேட்டர்களுக்கு. இதுதானா இறைவனின் நாள்?

கூட்டமொன்று, ஓட்டமும் நடையுமாய் இன்றைக்கு ஒரு ஒயில்பாத் என்று கேணியை, கடலை நாடிச்சாருகிறது. இறைச்சிவேகிறது அடுப்பில். முழுக்கு முடிந்ததும் அதற்கேற்ற உணவு. பின்என்ன? கும்பகர்ணப் படலம்தான். பரமன் பரிசுத்தமாய்க் கழித்த நாளல்லவா இது? வாரத்தில் ஒருநாள். இந்த ஒருநாளையும் இப்படிப் போக்கிவிட்டால்? மேற்கூறியவற்றைச் செய்யாமல் இருக்கும்படி கூறவில்லை. ஆனால், "சேசாருடையதைச் சேசாருக்கும் சருவேசுரனுடையவைகளைச் சருவேசுரனுக்கும் செலுத்தவேண்டுமல்லவா?"

உடலொடியப் பாடுபடுகிறான் பாட்டாளி. சினிமா தீங்கென்று தீட்டவில்லை. வாரத்திலொருநாளை மனைவி மக்களுடன் மகிழ்வாய்க் கழிக்கவேண்டாம்என்று எச்சரிக்கை செய்யவில்லை; நல்லுணவை வெறுக்கும்படி கூறவில்லை; இவற்றையும் செய்து ஞாயிறுவையும் நல்முறையில் அனுசரிக்க வேண்டுமென்றே விரும்புகிறோம்.

பொதுவாகப் பங்கிலுள்ள பத்திச்சபைகள் ஞாயிறுவிலே கூட்டங்கூடுகின்றன. ஏதாவது ஒருசபையில் பங்குகொள்ளலாம். சில கோவில்களில் ஞாயிறுதோறும் காலையில் அல்லது மாலையில் ஞானவாசினை நடைபெறுகிறது. நல்லகிறிஸ்தவர்கள் கூடியமட்டும் இதில் பங்கெடுப்பர். மாலையில் சற்பிரசாத ஆசீர்வாதத்தின்பின் சில இடங்களில் கன்னியர் அல்லது பக்திச்சபை அங்கத்தினரின் உதவியுடன் சிறுவர்க்கும் ஏன் வளர்ந்தோர்க்கும் ஞானோபதேச வகுப்பு நடைபெறுகிறது. இன்னும் பலர் ஒன்றுகூடி தமக்கு விளங்காத சந்தேகமான ஞான விஷயங்களைப்பற்றிச் சல்லாபிப்பர். இது குரவர் ஒருவருடன் நடைபெறும். இதை ஸ்ரடிசேர்க்கிள் (Study Circle) என்பர். இன்னும் ஒரு புது இயக்கம்அதாவது ஒரு குறிப்பிட்ட விஷயத்தை ஒரு குரவருடனும், ஒரு இல்லற ஞான அறிவாளியுடனும் குறிப்பிட்ட சில நிபந்தனைகளுடன் கலந்துரையாடல். இது பத்திரிசிய இயக்கம் (Patrician Movement) எனப்படும். இதனால் குறித்த விஷயத்தைப்பற்றி நாம் அறிந்தவற்றைப் பிறர்க்குக் கூறவும் அறியாதவற்றை அறியவும் நமது சந்தேகங்களை நீக்கவும் வழியுண்டாகும். இன்னும் கத்தோலிக்க பாடல்களைப் பழக்குதல், சிறுவர்க்குப் பூசைக்குதவி செய்யப்பழக்குதல் போன்றவற்றையும் செய்யலாம்.

இன்னும் சாதாரணமாய்க் கத்தோலிக்க பத்திரிகைகள் சஞ்சிகைகள் சனி, ஞாயிறு நாட்களில் வெளிவருகின்றன. அவற்றைப் படிப்பதிலும் நாளைக்கழிக்கலாம். ஞாயிறு சுவிசேஷ ஆராய்ச்சிகளை ஆழ்ந்து சிந்திக்கலாம். சிலர் தினந்தோறும் குறிப்பிட்ட நேரத்தில் ஞானவாசினை வாசிக்கிறார்கள். இது நலமான ஞானப்பழக்கமாகும். இலங்கையில் வெளியாகும் ஒரேஒரு தமிழ் வாரப்பத்திரிகையான **"பாதுகாவலனை"** நம்மில்லங்களில் வரவேற்பதும், பிறருக்கு அறிமுகம்செய்து வைப்பதும் நல்ல முயற்சியாகும். இன்னும் இவைபோன்ற வேலைகள் பலவுண்டு. இவற்றைவிடுத்து நாம் மேற்கூறிய இலௌகிககாரியங்களில் ஞாயிறுவைப் போக்கினால், கிறிஸ்தவர்என்னும் புனைபெயர் பூண்டவராவோம். இன்னும் முந்த முந்த முழுப்பூசையில் பங்குகொண்டு அடிமைவேலைகளை விலக்க வேண்டும். கடன்திருநாட்களையும் ஞாயிறுவைப்போன்றே அனுசரிக்க வேண்டும்.

**இ. பேர்னாட்.**

## சுதந்திரதினக் காட்சி

அநுராதபுரத்திலே வருகிறமாசி மாதம் 4-ந்திகதியன்று சுதந்திரதின விழாவைமுன்னிட்டுக் கைத்தொழில்-விவசாய பொருட்காட்சிஒன்று நடந்தேறவிருக்கிறது. அம்மாதம் 3-ம், 4-ம், 5-ந்திகதிகளில் தொடர்ந்துநடைபெறும் இப்பொருட்காட்சியிலே தனியார்துறைகளும், அரசாங்க கூட்டுறவுத்தாபனங்களும், அரசாங்கபகுதிகளும் கலந்துகொள்வதற்குவேண்டிய ஆயத்தங்கள் செய்யப்படுகின்றன.

## உடனே பதில் அனுப்புக

கல்விப்பகுதிக்கு அனுப்பப்படுகின்ற கடிதங்களுக்குத் தாமதமாகப் பதில் அனுப்பப்படுவதையிட்டுப் பாராளுமன்றத்தில் இக்கட்டான கேள்விகள் பொறிக்கப்படுவதாகத் தெரிவித்து, சகலகடிதங்களுக்கும் உடனேதானே பதில்அனுப்பிவைக்க ஆவன செய்ய வேண்டுமென்று ஆங்காங்குள்ள உதவி வித்தியாபதிகளுக்கும், கல்விஅதிகாரிகளுக்கும் கல்விமந்திரி சென்றவியாழக்கிழமை உத்தரவிட்டிருக்கின்றார்.

## ஆறுநாள் வேலை

நாள்ஒன்றுக்கு நான்கு அல்லது நாலரைமணித்தியாலம் வேலைசெய்யும் சிரேஷ்டபாடசாலைகள் ஐந்து நாட்களுக்குப்பதில் ஆறு நாட்கள் வேலை செய்யவேண்டுமென்று ஆலோசிக்கப்பட்டுவருகிறது. இதுபற்றியமுடிவு அப்பாடசாலைகட்கு அனுப்பிவைக்கப்பட்டுத் தைமாதம் 1-ந்திகதிதொடக்கம் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட வேண்டியிருக்குமென்று கல்விமந்திரி காரியாலயம் விடுத்துள்ள அறிக்கை ஒன்று தெரிவிக்கின்றது.

### எனதுஆபிரிக்கயாத்திரை–18

# இந்துசமுத்திரத்தில் பிரயாணம் தொடங்குகிறது

— வண. பிரான்சிஸ் ரிப்ளேஅடிகளார்

கப்பலுக்குவேண்டிய எரிபொருளை நிரப்பிக்கொண்டு காலை 8மணியளவில் எங்கள்நாவாய் புறப்பட்டது. சீதோஷ்ணம் பிரயாணிகட்கு வெகுஉற்சாகத்தை அளித்தது. மெல்லிய தென்றல் வீசிக்கொண்டிருந்தது. பறக்கும் மீன்கள் சிலவற்றை நாம் காணக்கூடியதாகவிருந்தது. பலபிரயாணிகள் நாம் முன்னர் பலசந்தர்ப்பங்களில் இவ்விதமீன்களைக் காணநேரிட்டதாகத் தெரிவித்தனர். எனினும், எனதுகண்களுக்கு இந்த அபூர்வமச்சங்கள் தென்பட்டது இதுவே முதற்தடவையாகும்.

கப்பலின் மருத்துவரிடமிருந்து அறிவிப்பொன்று தெரிவிக்கப்பட்டது. நாம் மலேரியாச்சுரம் அதிகமாகக் காணப்படும் ஒருபிரதேசத்தில் பிரயாணம் செய்துகொண்டிருப்பதால் பாதுகாப்புக்காகக் கப்பலின் மருத்துவப்பகுதியார் அளிக்கும் மருந்துக்குளிகைகளை உட்கொள்ள வேண்டுமென்பது அந்த அறிவிப்பு.

இன்றுமாலை ஒருபிரபல எழுத்தாளரைச் சந்தித்தேன். அவர் பலநூல்களை எழுதிப் பிரசித்திபெற்றவர். இங்கிலாந்தில் வேல்சைச் சேர்ந்தவர். கேப்ரவுணுக்குப் பிரயாணம்செய்கிறார். இருவருக்குமிடையில் ஒரு ருசிகரமான கலந்துரையாடல் இடம்பெற்றது.

பின்னர் கப்பலின்தளத்தில் நடைபெற்ற குழந்தைகட்கான உடையலங்காரப் போட்டியொன்றைக் காணச் சென்றேன். சிலகுழந்தைகள் வெகு நேர்த்தியானமுறையில் மாறுவேஷங்களைத் தாங்கியிருந்தனர். சாதாரணமாக உடையலங்கார அணிவகுப்புகளில் நாம் காணக்கூடிய கொள்ளைக்காரர்கள், மல்யுத்தவீரர்கள், தேவதைகள், வானவெளிப் பிரயாணிகள் முதலிய வேஷதாரிகளை இங்கும் காணக்கூடியதாயிற்று. ஆயினும், பார்வையாளர்களை அதிகம் கவர்ந்தவன் வயதில்குறைந்த ஒருபையனே. தன்னை முழுவதும் பலூன்களினால் மறைத்திருந்தான் அவன். நிகழ்ச்சிநிரலில் முந்திரிகைக் குலைத் தொகுப்புஎன அவனை விமரிசனம் செய்திருந்தனர். வெகு சுலபமாகவும், சிறப்பாகவும் தன்னை அலங்கரித்திருந்த பையனுக்கு முதற்பரிசு கிடைத்தது.

மாலை 6மணி 5நிமிடங்களின்போது சூரியன் அஸ்தமித்தான். சிலநிமிடங்கள் பகலவனின்கதிர்களால் அடிவானம் செக்கச்சிவந்திருந்தது. பின்னர் காரிருள் வானமனைத்தையும் ஆட்கொள்ளத்தொடங்கியது. இராஉணவு அருந்தியபின்னர் திரைப்படக்காட்சியொன்றுக்குச் சமுகமளித்தேன். கப்பலின் மேற்றளத்தில் வசதியான ஆசனங்களை அடுக்கிச் சினிமாச் சுருள்களைத் திரையிட்டார்கள். மெல்லிய இளந்தென்றல் மனோகரமாக வீசிக்கொண்டிருக்கத் திரைப்படக்காட்சியைப் பிரயாணிகளில்பலர் நன்குஅனுபவித்து மகிழ்ந்தனர்.

**10 வைகாசி, 1960.**

காலையில் கண்விழித்தபோது எங்கள் கென்யாகோட்டை குவாடாபி குடாவைத் தாண்டிக்கொண்டிருந்தது. அக்குடாவிலுள்ள விளக்குத்தம்பம் மிகப் பிரசித்திபெற்றது. ஆபிரிக்ககண்டத்தின் தோளைப்போல உலகப்படத்தில் இக்குடா காட்சியளிக்கின்றது. இங்கு யான்குறிப்பிட்ட விளக்குத்தம்பத்தைச்சுற்றிப் பெரிய கம்பிவலைகளைப் பாதுகாப்புக்காக [illegible]மைத்திருக்கிறார்கள். கொள்ளைக்கா[illegible]தொல்லைஇங்கு அதிகம். விளக்கு[illegible]பத்தைப் பய[illegible]டு அவர்கள் தங்கள்காரியத்தைச் சாதித்துக்கொள்வார்கள் எனக்கூறப்படுகிறது.

இங்கிருந்து 85மைல்கள் தெற்கே ராஸ்கபுன்பகுதி அமைந்துளது. இப்பகுதி முன்னர் சோமாலிலாந்துஎன அழைக்கப்பட்டது. இத்தாலியரின் ஆட்சிக்குக்கீழிருந்த சோமாலிலாந்து தற்போது விடுதலையடைந்து சோமாலி குடியரசு என்னும்நாமத்துடன் இயங்கிவருதல் நேயர்கட்குத் தெரிந்திருக்கலாம்.

சற்றுத்தொலைவில் ஒருசிறியகப்பலில் பிரயாணிகள் செல்வதைக் கண்டேன். அதில் 50யாத்திரிகர்கள்வரையில் காணப்பட்டனர். மெக்கா யாத்திரைசெல்லும் இஸ்லாமியர்கள்எனப் பின்னர் அறிந்தேன். இச்சிறியகப்பலில் ஆழ்கடலைத்தாண்டிப் பிரயாணஞ் செய்வதால் இன்னல்கள்பல விளையுமே என ஒருவர்கூறினார். சமயசம்பந்தமான யாத்திரைகள் செய்யும்போது இவ்விதஇன்னல்கள் ஒருபொருட்டல்ல என விளக்கம் தெரிவித்தேன்.

ராஸ்கபுன் ஒருதீவுபோலவே காணப்படுகிறது. 600அடி உயர்ந்த குன்றுகளும் அங்குண்டு. இங்குள்ள சுதேசிகள் மந்தைமேய்த்துச் சீவனம் செய்கின்றனர். முத்துக்குளிப்பதும் முக்கியமான தொழிலாகும். மக்கள் சிறுசிறு கிராமங்களில் வாழ்க்கை நடத்துகின்றனர். எனது தூரதிருட்டிக் கண்ணாடி மூலம் ஒருகிராமத்தையாவது தெளிவாகப் பார்ப்பதற்கு முனைந்தேன். எனதுமுயற்சிகள் வீணாயிற்று.

பகல்முழுவதும் உஷ்ணமாகவே காணப்பட்டது. வரண்டகாற்று வீசிக்கொண்டிருந்தது. நடமாடும் பொது அறைகளில் குளிர்சாதனவசதிகள் செய்திருப்பது பெரும்ஆறுதலாகும். இன்றுமுழுவதும் பொதுஅறைகளில் மிகஅதிகமான சனத்திரள் காணப்பட்டது. (வளரும்)

## ஆசிரியர்களின் இடமாற்றம்

வடமாகாணத்திலுள்ள பல்வேறு பாடசாலைகளிலும் கடமையாற்றிவருகின்ற ஆசிரியர்களில் சுமார் 400 பேர் அடுத்த தைமாதமுதல் பிறமாகாணங்களிலுள்ள பலபாடசாலைகளுக்கும் மாற்றப்பட்டிருக்கின்றனர். சென்ற ஐப்பசியில் ஆரம்பமான இந்தநிதிவருடத்தில் 5,000 ஆசிரியருக்கு மேல் இடமாற்றம்செய்யப்படவிருக்கின்றனர். 1961-ம்ஆண்டு வைகாசிமாதம் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்ட இடமாற்றதிட்டத்தின்கீழ் இதுவரை 6,000 ஆசிரியர்கள் இடமாற்றம் செய்யப்பட்டிருக்கிறார்கள்.

## புதிய கல்விமசோதா

சமீபத்திலே கல்விமந்திரி மூன்றாவது கல்விமசோதா ஒன்றையும் சனப்பிரதிநிதிகள்சபையிலே சமர்ப்பிக்கவிருக்கின்றார். இதில் தேசீயகல்விக்கமிஷன் செய்துள்ள சிபாரிசுகளிலே அரசாங்கம்ஏற்கும் சிபாரிசுகளும், விரைவிலே வெளிவரு[illegible]ன எதிர்பார்க்கப்படும் தொழில்நுட்ப கல்விக்கமிஷனின் சிபாரிசுகளும் இடம்பெறவிருக்கின்றன.

## புதியபாடத் திட்டங்க[illegible]

பாடசாலைகளிலே தற்சமையம்நடைமுறையில் இருந்துவருகின்ற பாடத்திட்டங்கள் மிகப்பழமையானவை; காலத்துக்கு ஒவ்வாதவை; ஆகவே, அவைகள் நாட்டின் தற்போதைய தேவைகளுக்கு ஏற்றவகையிலே திருத்தியமைக்கப்பட வேண்டுமென்று கல்விமந்திரி உத்தரவிட்டிருக்கின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தினசரி பூசை வழிகாட்டி

**மார்கழி**

| | | | | |
|---|---|---|---|---|
| 2 | ஞா. | **ஆகமனகாலத்தின் 1-ம் ஞாயிறு** | (வி. ம.) | [ஊ] |
| 3 | தி. | வேதபோதகநாடுகளின் பாதுகாவலரான அர்ச். பிரான்சீஸ்கு சவேரியார் | | [வெ] |
| 4 | செ. | அர்ச். கிறிசொலொகு இராயப்பர் | | [வெ] |
| 5 | பு. | காலதினம் | (அர்ச். சபா) | [ஊ] |
| 6 | வி. | அர்ச். நிக்கொலாஸ் | | [வெ] |
| 7 | வெ. | அர்ச். அமிர்தநாதர் | | [வெ] |
| 8 | ச. | **தேவமாதாவின் அமலோற்பவத் திருநாள்** | | [வெ] |

# சத்தியவேத பாதுகாவலன்

**1962-ம் ஆண்டு மார்கழிமாதம் 1-ந் திகதி**

## எங்கே உலாவச் செல்வோம் ?

மாலைவேளை. ஓங்கியுயர்ந்த அம்மாடியிலிருந்து இருவர் மெல்ல இறங்குகின்றனர். இன்று எங்கே உலாவச்செல்வோம் என ஒருவர் வினவுகிறார். மற்றவர் மெல்ல நகைக்கின்றார். வழக்கமான அந்த இடத்துக்குத்தான் எனப் பதிலளிக்கிறார். இருவரும் கட்டிடத்தின் முன்பாகவுள்ள பூங்காவைச் சுற்றிவருகின்றனர்.

மாடிக்கட்டிடத்தின் முன்பாகப் பரந்தவெளி. அங்கே சில இராணுவ வண்டிகள். வானொலிச் சாதனங்கள், எந்திரத் துப்பாக்கிகள் சகிதம் சில இராணுவவீரர்கள். பூங்காவைச் சுற்றும் இருவரையும் கண்டதும் அவர்கள் உசாராகின்றனர். அந்த இருவரில் குறிப்பாக முதியவரில் அவர்களின் பார்வை செல்கிறது.

சிறிது உலாவியபின் அவர்கள் இருவரும் மீண்டும் திரும்புகின்றனர். நாலாவது மாடியைநோக்கி அந்த முதியவர் செல்கின்றார். தமதறையின் சாளரத்தால் வெளியே நோக்குகிறார். எங்கு பார்க்கினும் ஆயுதமணிந்த காவல்வீரர்களே தென்படுகின்றனர். ஆம். அந்தக் கட்டிடத்தைவிட்டு ஒருஅடி வெளியேதள்ளினாலும் அவர்கள் இந்த மனிதரைச் சிறைசெய்துவிடுவர்.

இரவும், பகலும் காவல்வீரர்களால் கண்காணிக்கப்படும் இந்த மனிதர் யாவர்? இவர் செய்த பாரதூரக் குற்றங்கள் யாவை?

சிறைவாசம், தடுப்புக்காவல் இவை இவரின் சோதரர்கள். கிட்லரின் நாஜிக்கட்சி தம்நாட்டில் புகுந்து அரசியல் குழப்பம்செய்தபோது தாய்நாட்டுப்பற்றினால் எதிர்த்தார். நீண்ட சிறைத்தண்டனை பெற்றார். நேசதேசப்படைகள் கங்கேரியை விடுதலைசெய்தபோது இவருக்கும் சுதந்திரம் தரப்பட்டது.

நாஜிசத்தின் பயங்கரம் நாட்டைவிட்டகல, கம்மியூனிசம் சிறிது சிறிதாகப் பரவியது. மீண்டும் எதிர்த்தார். பயன்? 1948-ல் நத்தால்பூசையை நிறைவேற்றியபின்னால் இந்த மனிதரை—கங்கேரியின் பிதாப்பிதாவான கர்தினால் மின்செந்திஆண்டகையைக் காவல்வீரர் அழைத்துச்சென்றனர். விசாரணை என்றபெயரால் பொதுவுடைமையார் உலகுக்குக்காட்டும் நாடகமொன்று நடாத்தப்பட்டது. கங்கேரியின் தேசியவீரனுக்கு இருபதுவருடச் சிறைவாசம் தரப்பட்டது.

பொதுவுடைமை அரசாங்கம் கங்கேரிக்கு நன்மையைத் தரவில்லை. நெருக்கிடைகளையும், இன்னல்களையும் அனுபவித்த மக்கள் 1956-ல் ஆட்சியாளரை எதிர்த்துக் கிளர்ச்சிசெய்தனர். இளைஞர்களும், தொழிலாளரும் இப்புரட்சியில் அதிக உற்சாகம்காட்டினர். பொதுவுடைமைஆட்சி கலைக்கப்பட்டது. மக்களாட்சி நிறுவப்பட்டது. கங்கேரிய பிதாப்பிதாவையும் விடுதலைசெய்தனர் புரட்சியாளர்கள்.

ஆயின், சிலதினங்கட்கே இச்சுதந்திரம் நிலைத்தது. தனது சகாக்கள் வீழ்ந்த சேதிகேட்ட மொஸ்கோ துடிதுடித்தது. புரட்சியாளரை ஒடுக்கப் பெருவாரியாக ஆயுதங்களும், படைகளும் அனுப்பப்பட்டன. கங்கேரியின் சுதந்திரக்கிளர்ச்சி அடக்கியொடுக்கப்பட்டது. சுதந்திரத்தலைவர்கள் படுகொலைசெய்யப்பட்டனர். கங்கேரியில் இரத்தவெள்ளம் பெருக்கெடுத்தது.

கங்கேரியின் பிதாப்பிதாவையும் கைதுசெய்யுமாறு கட்டளைபிறந்தது. ஒரு பெரிய படையணி மேற்றிராசனமாளிகைக்கு விரைந்தது. நாலுதினங்கள்மட்டுமே சுதந்திரம் அனுபவித்த கர்தினால் அவசரமாக எதிர்காலத்தைச் சிந்தித்தார். மேலங்கியைக் கழற்றிக் கையிலெடுத்துக்கொண்டு ஓட்டமும் நடையுமாக அமெரிக்க தூதுவராலயம் சென்றார்.

அடைக்கலம் கோரியவரை அமெரிக்க அதிகாரிகள் காப்பாற்றினர். ஆட்சேபித்தனர் கங்கேரிய ஆட்சியாளர். கவலைகொள்ளவில்லை அமெரிக்கர்கள். அடைக்கலமாக வந்தவரைக் கடைசிவரை காப்போம் என அதிப[illegible] ஐசன்கோவரே பதிலளித்தார்.

பிறநாட்டுத் தூதுவராலயங்களில் ஆட்சியாளருக்கு அதிகாரமேதுமில்லை. இது சர்வதேச சட்டவிதி. இந்தவிதி கர்தினாலாண்டகையின் சுதந்திரத்தைக் காத்தது. ஆயின், சுதந்திரமாக அவர் வாழுவதற்கோ வகையில்லை.

அமெரிக்க காரியாலயத்தின் நாலாவதுமாடியில் கடந்த ஆறு வருடங்களாக மறைந்து வாழ்வுநடத்துகிறார் ஆண்டகை. வெளியே தம் சொந்தமண்ணில் கால்வைத்தாலும் கைதுசெய்யப்படும் பயங்கரநிலை. அடிக்கடி தரிசித்து ஆறுதல்செய்த [illegible]மை அன்னையும் கடந்தவருடம் காலமாகிவிட்டார்.

கர்தினாலாண்டகை சுதந்திரமாக இன்றுமா[illegible] எங்கே உலாவச் செல்வோம் என்று வினவும்நாள் எப்போதுவரும்? கங்கேரியின் விடுதலையின் பின்னர்தான் என நிச்சயமாகக் கூறலாம்.

## பரிசுத்த தந்தை கூறுகிறார்

தம்மைத் தமது திருச்சுதனாரிலும் மேலாகக் கருதுவதைத் தேவதாயார் விரும்பவேமாட்டார். ஆயின், கிறீஸ்துபற்றி எண்ணும்போது அவரது அன்னையை நினைக்காமலிருப்பது முடியாதவோர் கருமம். எனவே, தேவதாயின் வழிபாடு சம்பந்தமாகச் சிறிதளவேனும் மூடக்கொள்கைகள் கலந்துவிடாதிருக்கக் கவனம்எடுத்துக்கொள்ள வேண்டும்.

16-ம் நூற்றாண்டிலிருந்து திருச்சபையைவிட்டுப் பிரிந்தவர்களிடையே தேவதாயாரின்பக்தி குறைந்துவிட்டதையும், அதற்காக அவர்கள் விவிதமான கருத்துகளைக்கூறி வருவதையும்கண்டு நாம்பெரிதும் வருந்துகிறோம்.

அன்னை வயதில் முதிர்ந்துவிட்டாள். இனிமேல் எங்கள் கருமங்களில் அவளோடு ஒத்துழைக்க முடியாது எனக்கூறும் புத்தியற்ற புதல்வர்களது செயல்போன்றதே தேவதாயாரின் பக்தியைத் தூஷிப்பவரது செயல்.

— 23-ம் அருளப்ப பாப்பரசர்.

## சங்கத்தில் எம் விசுவாசம்

"கிறீஸ்தவன் என்பான் விசுவாசத்தில் தளரான்" என்றும், "கத்தோலிக்கன் என்பான் சத்திய திருச்சபையினின்று அகலான்" என்றும் வேதாசிரியரொருவர் கூறினார். ஆனால், வேறாசிரியர் ஒருவர் கூறுவது, "புத்திக்கெட்டாச் சத்தியத்தைத்தான் கோழைக்கிறீஸ்தவன் விசுவாசம் கொண்டு தழுவுகிறான்; மனிதபான்மைக்கோ எட்டாத உண்மைகளையெல்லாம் வேறொரு ஆசான் கூறியதால் 'ஆமென்' சொல்லி ஆமோதிக்கிறான்......" இப்படி விசுவாசத்தைப் பரிகாசம் பண்ணுவதும் உண்டு.

நாளாந்த சீவியத்திலேயே விசுவசிக்கவேண்டிய காரியங்கள் எத்தனையென்று அறிந்தாலோ! வயிற்றுவலி வந்ததும் வைத்தியம்தேடி ஓடுவது வைத்தியரிலும், அவர்தரும் மருந்திலும் பூண்டவிசுவாசம் அல்லவா? தினசரிப் பத்திரிகையைத் திறந்ததும் சீனப்படையெடுப்பு, அமெரிக்கபோர் தயாரிப்பு, யப்பானிய உணவுச்சீர் சிறப்பு என்றெல்லாம் வாசிக்கும் பொழுது எழுதிய ஆசிரியர்மேல் விசுவாசம் வைத்தாலன்றி வாசித்தவை நமது அறிவுக்கு வழியாயிருக்கமாட்டாது. விரும்பியவொரு ஊருக்குப் போகும்வழி தெரியாது தத்தளிக்கும் வேளையில், "அந்த ஊருக்குப்போகும் வழி எதையா?" என்று கேட்கும் பொழுது அந்தஊர்வாசியிலே வைத்துவிட்டோம் விசுவாசம். இப்படியே தினமும் பலவிதத்தில் விசுவாசம் செலுத்துகிறோம். இது இயற்கையும், வாழ்க்கையின் வழக்கமும்.

எம வேதவிசுவாசமும் அவ்விதமே. வித்தியாசம் உண்டானால், அது நாம் விசுவசிக்கும் ஆளிலே தங்கியிருக்கிறது. சாதாரணமாய் ஒருவனை நம்புவது அவனது உண்மை, நேர்மைத்தனம், அறிவு, ஆற்றல், தன்மை முதலியவற்றின் காரணத்தால். கிறீஸ்தவ விசுவாசம் கிறீஸ்துவில் நாம் காணும் தேவனில்: தேவனின் சர்வஞானம், பூரண ஆற்றல், என்றும் வழுவாநேர்மை முதலிய தெய்வீகத் தன்மையின் காரணத்தால்.

இதற்கு முன்னதாகவே தேவன் என்று ஒருவர் உண்டு; எங்கும் வியாபித்திருக்கும் ஈஸ்வரன் அவர்; காணப்படும் பொருள்களுக்கு கர்த்தாவும் அவரே என்று ஏதோ வழியாக அறிந்திருக்க வேண்டும். பிறகுதான் இவர் மனுக்குலத்துடன் பேசியதுண்டா; தம்மை நமக்கு மறைக்கும் திரையை நீக்கித் தம்மைக்காண்பித்தாரா என்ற பிரச்சினையின் பதிலைக் கிறீஸ்துவில் காண்கிறோம்.

நித்திய பிதாவின் உத்தமகுமாரன்; சூரியவொளியின் சுடர்போலும், மழைமுகிலின் துளிபோலும் இவர் மாந்தரை அண்டி உரையாடிச் சென்றார். நித்தியசீவியம் அளிக்கும் போதனையைப்பரப்பித் தமது சாயல் பூண்ட மானிட இதயங்களைத் திரும்பவும தன்வசப்படுத்தினார். இவரின் அழைப்பிற்கிணங்கி மனிதனும் இவருக்கு "ஆம" என்ற பதிலை மனமுவந்து அளிக்கிறான். இவ்வாறான தேவ அழைப்பின் பதில்தான் கிறீஸ்தவனது விசுவாசம்.

அதுவும் ஒரு ஆளில் வைக்கும் விசுவாசம். இந்த ஆளோவெனில் இருசுபாவம்: தெய்வீகம்—மனுஷீகம் பூண்ட இரண்டாம் ஆளாகிய சுதனாகிய சர்வ ஈஸ்வரன்.

இவரை நம்பி, இவர் போதனையில் விசுவாசம் வைப்பதில் தடையாது? இடைஏது? இவரை விசுவசிக்கும் பொழுது ஒரு இலட்சம்கோடி (1,000,000,000,000) மக்களுடன் ஒருமனப் படுகிறோம். கிறீஸ்துவுடன் ஒருமனப்பான்மையடைகிறோம். சுருங்க......யாவரும் கிறீஸ்தவர்கள்.

ஆயினும், சத்தியதிருச்சபையைத் தாயெனத்தழுவி மகிழும் நமக்கு இன்னொரு உண்மை உண்டு. கிறீஸ்து மகான் கண்காணாதவொரு சபையை மட்டுமல்ல, கண்கண்டு களிக்கக்கூடிய திருச்சபையையும் ஏற்படுத்தி, அதன் போக்கையும், கதியையும் அப்போஸ்தலருடையவும், அவரைப்பின்தொடர்வோருடையவும் கைகளிலே ஒப்படைத்தார். இதன் விளைவாக, இன்றும், என்றும் எந்தச்சூழ்நிலையில் தன்னும் திருச்சபை கற்பிக்கும் கற்பனை எமது விசுவாசத்தைக்கோரி நிற்கிறது. இதுவே நமக்கும், பிரிவினைக்கிறீஸ்தவர்களுக்குமிடையில் உள்ள பிரதான பாகுபாடு.

வத்திக்கானில் சங்கம் கூடியது இன்றைய உலகில், கிறீஸ்துவின் நற்செய்தியை அவரது திருச்சபை எவ்வாறு விளங்கிப் பயன்படுத்துகிறது என்று ஏனையோருக்குக்கூடிய தெளிவுடன் விளக்கிக் காட்டுவதற்கு. தவிர, கிறீஸ்தவபோதனை ஆண்டுக்காண்டு நீண்டுவிடுவதல்ல. ஆனால், ஆண்டுக்காண்டு புதுப்புது பிரச்சினைகளும், பற்பல நோக்குகளும் திரண்டுவந்து அதனை மங்கப் பண்ணுகின்றன.

எனவே, கிறீஸ்துவால் நியமிக்கப்பட்ட ஆயர்கள் அனைவரும், மறைபரப்பிகளும் ஒருங்குசேர்ந்து மங்கலைநீக்கக் கங்கணம்கட்டி நிற்கிறார்கள். ஆய்ந்தபின் மக்களுக்குத் தெளிவுடன் தேவையெனால் ஏற்றமுறைகளிலும், மொழிகளிலும் போதனைக் களஞ்சியத்தை விரித்துப் பரிமாற முயற்சிக்கிறார்கள்.

இந்தஆயர்கள்மேல் நாம் வைத்திருக்கும் நம்பிக்கை ஊன்றவேண்டும். விசுவாசம் ஓங்கவேண்டும். திருச்சபையின் மேற்றிராசனங்களைத் தமது தோள்மேல் களையின்றிச் சுமந்து, தளராது பணிபுரிய எமது அன்பினாலும், அமைச்சலாலும், பிரமாணிக்கத்தாலும் உதவிபுரிய வேண்டும். "திருச்சங்கத்தின் முடிவுகளை நன்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காவலன் நேயர்களே

உங்கள் அபிமான பத்திரிகையான பாதுகாவலன் வளர்ந்து வருவதுகண்டு பாராட்டியும், ஆசிகூறியும் எழுதும் அன்பர்கட்கு முதலில் நன்றிதெரிவிக்க விரும்புகிறோம். கடந்த சிலமாதங்களாக இப்பத்திரிகையில் புகுத்தப்பட்டுள்ள புதியஅம்சங்கள்பற்றி நேயர்கள் எவ்வித அபிப்பிராயம் கொண்டிருக்கின்றனர் என்பதை அறிவது எமது முக்கியமான கடமையாகும். எனவே, அன்பர்கள் கீழ்க்காணும் தலைப்புகளில்உள்ள அம்சங்கள்பற்றிய தங்கள் அபிப்பிராயங்களைத் தெரிவிப்பது பாதுகாவலன் வளர்ச்சிக்கு மென்மேலும் உதவியாகஇருக்கும்.

- ஆசிரிய தலையங்கம்
- பேசும் பேனா
- உல்லாசவேளை
- இருளில் ஒளி
- சிறுவர் விருந்து
- மகளிர்மன்றம்
- இவ்வார அர்ச்சியசிட்டவர்

நிர்வாக ஆசிரியர்,
சத்தியவேத பாதுகாவலன்,
மேற்றிராசன மாளிகை, யாழ்ப்பாணம்.

# நல்ல பிரசங்கமா?

ஞாயிற்றுக்கிழமைப் பூசைக்குப்பின் இக்கேள்வியைப் பலரும கேட்பது வழக்கம். சிலர் பிரசங்கம் நல்லாய் இருந்தது என்றும், சிலர் அது வெகுவாய் நீண்டுபோயிற்று என்றும, இன்னும் சிலர் அதில் உள்ள குறைவு நிறைவுகளைப்பற்றியும் பலவாறு பேசிக்கொள்ளுகின்றனர். பிரசங்கம் நல்லதோ, கூடாதோ என்பது பிரசங்கம் செய்த குருவானவரில் அதிகம் தங்கியிருக்கவில்லை. பெரும்பாலும் பிரசங்கம் கேட்கிற எங்களிலேயே தங்கியிருக்கிறது. குருவானவர் சொன்ன பிரசங்கத்தை உபயோகப்படுத்திக் கொண்டோமா, அதனால் யாதேனும் பயன் அடைந்தோமா, என்ற வினைக்களுக்கு நாம் அளிக்கத் தக்கதாயிருக்கும் விடையிலேயே நல்லபிரசங்கமோ, அல்லவோ என்பது தங்கியிருக்கிறது.

பிரசங்கம் செய்யும் குருவானவர்களிற் சிலர் சிறந்த பேச்சாளர்களாய் இருக்கிறார்கள். அப்படியாக எல்லோரும் இருப்பது முடியாதகாரியம். பேச்சாளராய் இல்லாதவர்கள் குருத்தொண்டுக்குரிய மறுபல ஆற்றல்கள் படைத்தவர்களாய் இருக்கின்றனர். விசுவாசிகள் சகலரும் சிறந்த பேச்சாளர்களாகிய குருமாரின் பிரசங்கங்களைக் கேட்டுக்கொள்ள முடியாது, ஆகவே நாம எவ்வாறு எத்தகைய பிரசங்கங்களையும் கேட்டுப் பயனடையத்தக்கதாக இருக்கவேண்டும். அப்படிப்பயன் அடைவதற்குப் பின்வரும் ஆலோசனைகள் உதவியாய் இருக்கும்.

(1) பிரசங்கங்கள் கேட்பது சிறந்த பேச்சாளர்களின் சாதுரியமான சொற்பொழிவுகளைக்கேட்டு மகிழ்வதற்கல்ல. கிறீஸ்துநாதரின் வார்த்தைகளைக் கேட்டுச் சிந்திப்பதற்கே. ஆகவே, பிரசங்கங்கள் சிறந்த சொற்பொழிவுகளாய் இல்லாவிட்டால் மனத்தளர்வு கொள்வதற்கு இடமில்லை.

(2) பிரசங்கம் கேட்கவேண்டுமென்ற விருப்பம் இருக்கவேண்டும். எப் பிரசங்கத்திலும் நமக்கு உதவக்கூடிய விஷயம் யாதேனும் இருக்கக்கூடும். பிரசங்கம் கேட்கவேண்டுமென்ற விருப்பம் இருந்தால் பிரசங்கநேரத்தில் ஒருபோதும் ஒருவரும் கோவிலுக்கு வெளியே போகமாட்டார்கள்.

(3) பிரசங்கத்தில் ஊக்கத்துடன் பங்குபெற வேண்டும். திரைப்படத்தில் தோன்றும் உருவங்களைப் பார்த்துக் கொண்டிருப்பதைப் போலிராமல் நாமும் குருவானவரின் சிந்தனைகளுடன் எமது சிந்தனைகளையும் தொடரவிடவேண்டும்.

(4) பிரசங்கம் நடக்கும்போது வெளியே பராக்குப் பார்ப்பது தகாது. அப்படி அங்கிங்கு பார்த்துக்கொண்டிருந்தால் எமது சிந்தனைகளும் பிரசங்கத்தில் இருக்கமுடியாது. ஆகவே பிரசங்கம் செய்யும் குருவானவரையே பார்த்துக் கொண்டிருப்பது நன்று.

(5) விசுவாசத்துடன் பிரசங்கத்தைக்கேட்கவேண்டும். தேவன் தமது வேலையைச் செய்வதற்குப் பலவீனமான மனிதனையே உபயோகித்திருக்கிறார். பிரசங்கம்செய்யும் குருமாரில் சில குற்றங்குறைகள் இருக்கலாம், குறைகளில்லாத மனிதர் எவருமில்லை. இவற்றைப் பொருட்படுத்தாது அவர்களுடைய வாயிலே நின்று தேவனே பேசுகிறார் என்ற விசுவாசத்துடன் அவர்களது வார்த்தைகளைக் கேட்டுச் சிந்திக்க வேண்டும்.

(6) பிரசங்கத்தைத் தொடக்கத்திலிருந்தே அவதானத்துடன்கேட்க வேண்டும். எதுவிஷயத்தைப்பற்றிப் பிரசங்கம் இருக்கப் போகிறது என்பது ஆரம்பத்திலேயே தெளிவாகிவிடும். தொடக்கத்திலிருந்தே சிந்தனை பிரசங்கத்தில் இராவிடில் அப்பிரசங்கம் நமக்கு உபயோகமற்றதாய்விடும்.

(7) பிரசங்கத்தின் பிரதான எண்ணம எதுவென்பதைக் கண்டுபிடித்து அதை எவ்வாறு குருவானவர் எடுத்துக் காட்டுகிறார் என்று அவதானித்துக்கொள்ளவேண்டும்

(8) குருவானவர் பிரசங்கத்தில் சில கதைகள் சொல்லக்கூடும். அந்தக் கதைகளால் என்னபாடம் படிப்பிக்கப்படுகிறதென்று விளங்கிக்கொள்ள வேண்டும்.

(9) பிரசங்கநேரத்தில் மறுவிஷயங்களில் எமது மனதைச்செலுத்தப்படாது. சிலசமயங்களில் குருவானவரின் வாயிலிருந்துவரும் சிலசொற்கள் எமது வீட்டுச்சிந்தனைகளையோ, அலுவலகச் சிந்தனைகளையோ எழுப்பிவிடக்கூடும். இதில் விழிப்பாக இருக்கவேண்டும்.

(10) ஒவ்வொரு பிரசங்கத்திலும் ஒரு தீர்மானத்தைச் செய்துகொள்வது நன்று. இத்தீர்மானத்தை மனதிலே நிறுத்தி இடையிடையே சிந்தித்துவருவதால் அப்பிரசங்கத்தினால் நாம் முழுப்பயனையும் அடைந்துகொள்வோம்.

அர்ச். இஞ்ஞாசியார் பலமுறை பல விஷயங்களைப்பற்றிக் கூறியிருந்த பொழுதிலும் அவர் மாணவனாகிய அர்ச். சவேரியாரின் மனதில் ஆழப்பதிந்தது, "மனிதனானவன் உலகம் முழுவதையும் தன்வயமாக்கிக் கொண்டாலும், தன் ஆத்துமத்தை இழந்துவிடுவானாகில் அதனால் அவனுக்கு ஆகும்பயன்யாது", என்னும் வாக்கியமே. இதன்பயனாக ஒருகோடி மனிதரைச் சத்தியமறையில் அவர் சேர்க்கவில்லையா?

நிறைந்த மனதுடன் ஏற்று அனுசரிக்க," மனத்தில் ஆசையும், ஆயத்தமும் வேண்டும்.

கி. சு.

# பௌத்த துறவிகள் பாப்பரசரைத் தரிசித்தனர்

அண்மையில் 28 புத்தகுருக்கள் பரிசுத்த பாப்பரசரின் பிரத்தியேக பேட்டி கிடைக்கப்பெற்றார்களென வத்திக்கான் செய்தியொன்று தெரிவிக்கிறது. இந்தக் குருக்கள் ஜப்பானிய தேசத்தைச் சேர்ந்தவர்கள்.

பதினாறுவது நூற்றாண்டில் அர்ச். சவேரியார் ஜப்பானுக்கு விஜயம்செய்ததை ஞாபகப்படுத்தினார் பரிசுத்ததந்தை. 300 வருடங்களின்பின்னர் ஜப்பான் தேசத்துக்குள் வேதபோதகர்கள் சென்றபோது சவேரியார் ஊட்டிய விசுவாசம் இன்னமும் அங்கு காணக்கூடியதாயிற்று என்பதையும் பாப்பு அவர்கட்குத் தெரிவித்தார்.

## பாப்பரசரின் புதிய குடும்பமருத்துவர்

அண்மையில் காலஞ்சென்ற பாப்பரசரின் குடும்ப மருத்துவரின் ஸ்தானத்துக்குப் புதியமருத்துவரொருவரை நியமித்திருக்கிறார்கள். பொலக்னேவைச்சேர்ந்த புரொபசர் அன்ரோனியோ கஸ்பாரினி எண்பதுவயது நிரம்பியவர். மருத்துவத்துறையில் மிகுந்த புகழீட்டியவர்.

### யூகோ காரியாலயம் உபசரிக்கிறது

2–ம் வத்திக்கான் பேரவையை முன்னிட்டு உரோமைநகருக்கு வருகைதந்துள்ள தத்தம்நாட்டு ஆயர்கட்கு இத்தாலிய பிறதேச தூதுவர் காரியாலயங்கள் உபசார வைபவங்கள்நடத்தி வருகின்றன. அண்மையில் பொதுவுடைமை நாடான யூகோசிலவக்கியாவிலிருந்து வந்துள்ள ஆயர்கட்கு மேற்படி தேசத்தின் இத்தாலிய தூதுவராலயம் பிரமாண்டமான விருந்துவைபவமொன்று நடாத்திக்கௌரவித்துள்ளது.

### பொதுச்சங்கத்தின் போது மூர்ச்சித்தார்

2-ம் வத்திக்கான் பொதுச்சங்கம் நடைபெற்றுக்கொண்டிருந்த வேளையில் ஒருஆயர் மூர்ச்சித்து வீழ்ந்தார் இந்தஆயர் அவுஸ்திரேலியாவைச் சேர்ந்தவர். உடனடியாக அவரை மருத்துவமனைக்கு எடுத்துச்சென்றனர். 65 வயதான அவர் அதிக இரத்த அமுக்கத்தால் பீடிக்கப்பட்டாரென மருத்துவ நிபுணர்கள் அறிக்கை விடுத்துள்ளனர்.

## பிரித்தானியாவில்

வெள்ளிக்கிழமைகளில் புகைரத உணவுச் சாலைகளில் மாமிசம் சேர்ப்பதில்லை என பிரித்தானிய புகைரதப் பகுதி தீர்மானித்துள்ளது. இதன் மூலம் கத்தோலிக்க பிரயாணிகட்கு உதவுவது அவ்விலாகாவின் திட்டம்.

ஆகவே, வெள்ளிக்கிழமைகளில் மாமிசத்துக்குப் பதிலாக மீன் உபயோகிக்கப்படும். மாமிச சூப்புக்குப் பதிலாக மரக்கறிச் சூப் அளிக்கப்படும்.

# ரே. க. கிறிஸ்தவம்—1963

## வித்தியாதிபதியால் அங்கீகரிக்கப்பட்ட பாடத்திட்டத்திற்கு ஏற்ற ஞானோபதேச நூல்கள்

| | |
|---|---|
| பாலர் வகுப்பு (அல்லது 1-ம் வகுப்பு) | — பாலர் குறிப்பிடம் |
| 2-ம் வகுப்பு | — முதல்நன்மைக் குறிப்பிடம் |
| 3-ம் வகுப்பு | — சிறுவர் குறிப்பிடம் I-ம்பாகம் |
| 4-ம் வகுப்பு | — சிறுவர் குறிப்பிடம் II-ம் பாகம் |
| 5-ம் வகுப்பு | — சின்னக்குறிப்பிடம் (முழுவதும்) |
| 6-ம் வகுப்பு | — பெரிய குறிப்பிடம் I–ம் பாகம் |
| 7-ம் வகுப்பு | — பெரிய குறிப்பிடம் II-ம் பாகம்) |
| 8-ம் வகுப்பு | — பெரிய குறிப்பிடம் (முழுவதும்) கிறிஸ்துநாதர் சீவியசரிதை (சுருக்கம்) |
| க. பொ. த. ப. (சாதாரண) ஆயத்தவகுப்பு | — 1. மாணவர் கிறிஸ்தவ போதகம் I–ம் பாகம் 2. அர்ச். மத்தேயு சுவிசேஷம். |
| க. பொ. த. ப. (சாதாரண) வகுப்பு | — அர்ச். மாற்கு சுவிசேஷம் மாணவர் கிறிஸ்தவ போதகம் (3 காண்டங்களும்) |
| உ. பா. த. ப. ஆயத்த வகுப்பு | — 1. அப்போஸ்தலருடைய நடபடிகள் 2 மூலாதார வேத விளக்கம் (அச்சில்) |
| உ. பா. த. ப. வகுப்பு | — அப்போஸ்தலருடைய நடபடிகள் சத்தியவேத தர்ப்பணம் 1–ம் காண்டம் |

கிடைக்குமிடம்:
அர்ச். சூசைமாமுனிவர் கத்தோலிக்க அச்சகம், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகளிர் மன்றம்

அன்புச் சோதரிகளே!

கிறிஸ்மஸ் நெருங்குகிறது. பாதுகாவலனும் சிறப்பிதழ் தாங்கிவருவான் அல்லவா? மகளிர்மன்றத்துக்குச் சிறப்பிதழில் தனியிடம்தர நிர்வாகஆசிரியர் தீர்மானித்துள்ளார்என்ற சுபசெய்தியை முதலில் தெரிவித்துக் கொள்கிறேன். நம் மங்கையரிடையே சிறப்பிதழைமுன்னிட்டு ஒருபோட்டியை நடாத்துவதெனவும் தீர்மானித்துள்ளேன். எம்நங்கையரின் நலன்கருதி எழுதப்படும் சிறந்தவோர் கட்டுரைக்கும், ஒரு சிறுகதைக்கும் பரிசுகள்வழங்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. விடயங்கள் தாளின் ஒருபக்கத்தில்மட்டுமே வரையப்படுதல் அவசியம். 'புள்ஸ்காப்' அளவில் இருதாள்கட்குள் விடயங்கள் அடங்குதல் வேண்டும். பிற தமிழ்ச்சஞ்சிகைகள், பத்திரிகைகளில் வெளிவராதவையாகவும் இருத்தல் முக்கியம். பரிசுக்குரித்தாய கதை, கட்டுரையுடன் பிரசுரிப்பதற்குகந்த விடயங்களும் மகளிர்மன்றத்தில் வெளியாகும். கொஞ்சுமொழிப் பெண்களே அஞ்சாது முன்வாருங்கள். பேனமுனைகொண்டு போட்டியிட்டுப் பரிசைத் தட்டிக்கொள்ளுங்கள். முடிவுதேதி 10-12-62.

சோதரி ரோஜா.


## பாவையென் முகத்தைப் பார்த்தார் ஒருவர்....



(1) ஜனக்குழாம் கூடியிருக்கிறது. மத்தியில் இரக்கமே உருவான இரட்சகர். மக்கள்ஈடேற்றத்திற்கு வழி காட்டும் வார்த்தைகளை எடுத்துரைத்துக் கொண்டிருக்கிறார். பாத்தை அவள் பாவி மரியமதலேனாள் என்று பெயர் வாங்கியவள். அமலனின் அழகுச் சொரூபத்தில் அடிமையாகிவிட்டாள். தன் காமக்கண்களால் அவரை நோக்கினாள். அவரும் அவளை நோக்கினார். என்ன பார்வை அது? தெய்வீகக்காதல் பார்வை! ஆன்மீக அவாக் கொண்ட பார்வை. அநேகம் ஆடவரை அடிமையாக்கியவள் அமலன் பார்வையில் அடிமையாகிவிட்டாள். விரைந்தாள் வீட்டுக்கு; அணிகலன்களைக் களைந்து எறிந்தாள், பட்டாடைகளை அகற்றினாள். கூந்தலைக் கலைத்தாள். வாசனைப் புட்டியுடன் விரைந்தாள் அவரைத்தேடி. பரிசேயன் வீட்டில் அசனம் பண்ணிக்கொண்டிருந்தார் யேசு. அவர் பாதங்களில் விழுந்தாள். மனஸ்தாபக் கண்ணீரால் அவர் பாதங்களைக் கழுவினாள். கூந்தலால் துடைத்தாள். வாசனைத் தைலத்தால் அர்ச்சனை புரிந்தாள். "உன்பாவங்கள் மன்னிக்கப்பட்டன" என்று ஆறுதலுரைத்தார் யேசு. என்றுமில்லா மனமகிழ்ச்சியுடன் வீடு திரும்பினாள். பாவிபரிசுத்தவதியானாள்.

•

(2) நாயீம் பட்டணத் தெருக்கள் வழியாக சென்று கொண்டிருக்கிறார். மனுவுருவெடுத்த இறைவன். எதிரில் ஒரு பிரேத ஊர்வலம். பாடையின் பின் ஒரு வயோதிபமாது தன் ஒரேயொருமைந்தனை— அழகுகொழிக்கும் அருந்தவப் புதல்வனை— முதுமையில் துணையான ஊன்றுகோலை இழந்துவிட்டாள் அவள். அவள் முகத்தில் இரு கண்ணீர்நதிகள் ஓடிக்கொண்டிருக்கின்றன. அவளுக்கு ஆறுதல் கூறக்கூடியவர்கள் யார்? இறைவனுக்கு இரக்கம் மேலிட்டது. அவள் நிலையையுணர்ந்த அவரும் அவளை நோக்கினார். தாயின் கண்ணீர் ஆற்றுநிலைமை அவர் மனதில் ஆழப்பதிந்தது. பாடையைத் தொட்டார். அதைத் தூக்கிச் சென்றவர்கள் தரித்தார்கள். பிரேதத்தின் கையைப் பிடித்துத் தூக்கினார். "வாலிபனே! எழுந்திரு" என்றார். என்ன ஆச்சரியம் பிரேதம் அசைந்தது. வாலிபன் கண்களை விழித்து எழுந்திருந்தான். அவனை அவன் தாயிடம் ஒப்படைத்தார். மைந்தனை இழந்தவள் மனதில் பொங்கும் மகிழ்ச்சியுடன் வீடு திரும்பினாள். யேசுவின் இரக்கப்பெருக்கந்தானென்னே!



(3) சமாரிய குலத்தைச் சேர்ந்தவள் அவள். தன் அருமைமகள் தீரா நோயினால் துடிப்பதைக் காணப் பொறுக்கவில்லை அவளுக்கு. யேசு செய்யும் புதுமைகளை அறிந்திருந்தாள். அவரிடம் ஓடோடியும் வந்தாள். தன் மகளின் நிலைகூறி அழுதாள். அரற்றினாள். யூதர்குலத்தால் விலக்கப்பட்ட குலத்தைச் சேர்ந்தவள் அவள். அவள் விசுவாசத்தைச் சோதிக்க முனைந்தார் யேசு. அவளை ஏறெடுத்துப்பாராது சென்று கொண்டிருந்தார். அவளோ விடாப்பிடியாகத் தொடர்ந்துகொண்டிருந்தாள். முடிவில் அவளது அலட்டலைப் பொறுக்காத யேசு அவளைப் பாராமல் "பிள்ளைகளின் அப்பத்தை நாய்களுக்குப் போடலாமோ" என்று வினவினார் அவளோ: "பிள்ளைகள் உண்ணும் மேசையில் இருந்து கீழே விழும் துண்டுகளை நாய்கள் தின்னுவதுண்டே" என்றாள். இதைக்கேட்ட யேசு அவளைக் கருணையுடன் நோக்கினார். "உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது உன்மகள் குணமடைவாள்" என்றார். அப்பொழுது அவள் கவலையெல்லாம்நீங்கப்பெற்றவளாய் ஆனந்தமாக வீடுதிரும்பினாள்.

•

(4) மற்றொருமுறை சனக்கூட்டத்துக்குப் பிரசங்கித்துக்கொண்டிருக்கிறார் யேசு. விபசாரத்தில் பிடிபட்ட ஸ்திரி ஒருத்தியை இழுத்துக் கொண்டு வருகிறார்கள் சிலபரிசேயர். காலவழக்கப்படி கல்லெறிந்துகொல்ல முனைந்தனர். புலிக்குழாத்திடை அகப்பட்ட அபலையாகநடுவில் நின்று கொண்டிருந்தாள்அவள். பாவிகளை மீட்கவந்த பரமதேவன் அவளைத் தன் தயைவிழிகளால் நோக்கினார். கருணை பொங்கியது அவர் உள்ளத்தில். "உங்களில் குற்றமில்லாதவன் முதற் கல்லைஎடுத்துஎறியக்கடவான்" என்றார் யேசு. பின்னர் குனிந்து எழுதிக் கொண்டிருந்தார் நிலத்தில். என்ன எழுதினாரென்று எட்டிப்பார்த்தனர் குற்றஞ்சாட்டியபரிசேயர். அவர்களது பாவச்சீவியத்தின் ஏடுகளைப் புரட்டிக் கொண்டிருந்தார் யேசு ஒருவர்பின்னொருவராக அகன்றனர் அவ்விடத்தைவிட்டு. கடைசியில் எஞ்சியவர்கள் இரட்சகரும், அவளுமே. "உனக்கு எவரும் தண்டனைதரவில்லையா" என்று கேட்டார்மனுமகன். "இல்லை" என்றாள் அவள் கண்ணீர் பெருகிய கண்களுடன். "யானும் உனக்குத் தண்டனை தரவில்லை; சமாதானமாய்த் திரும்பிப் போ" என்றார். அவளும் தன்னை மீட்ட யேசுவின் கருணையை நினைந்து நினைந்துகொண்டே வீடு நோக்கினாள்.

## பாட்டியும் பேத்தியும்

(ஆகமனகாலத்தின் முதலாம்ஞாயிறு)

பேத்தி: "வான மண்டலத்தின் சத்துவங்கள் அசைக்கப்படும், வெள்ளிகள் நிலத்தில் விழும், சூரிய சந்திரன்களில் மாற்றங்கள் காணப்படும், கடல்கள் கரையை மீறிப் பெருக்கெடுக்கும்" என்று எங்கள் ஆண்டவர் சொன்னாரமே பாட்டி...

பாட்டி: ஏது நாளைய சுவிசேஷத்தைப் பற்றிக் கேட்கிறாயா?

பேத்தி: ஆமாம்! பாட்டி. விளங்கப்படுத்துங்கள்.

பாட்டி: உலக அழிவு கிட்டிவிட்டது என்பதற்கு அடையாளமாக இவைகள் சம்பவிக்குமடி கண்ணே.

பேத்தி: அது சரிபாட்டி. எதற்காக ஆண்டவர் இதை முன்னராகவே அறிவித்தார் பாட்டி.

பாட்டி: ஏனென்றால் மோனை, நாங்கள் எல்லாரும் நல்லவர்களாய்ப் புண்ணியவழியில் நடக்கவேண்டும். பாவம் செய்யப்படாது என்பது எங்கள் ஆண்டவரின் விருப்பம். ஆனால், இதற்குமாறாக எப்பொழுதும் பாவிகளாய்ச் சீவித்து வருகிறவர்கள், இந்த அடையாளங்களைக் கண்டபின்னராவது மனந்திரும்பி மனஸ்தாபப்பட்டுத் தபம் செய்யட்டும் என்றுதான் ஆண்டவர் இதை முன்னராகவே அறிவித்திருக்கிறார்.

பேத்தி: "எப்பொழுதும் உவமைகளின் மூலம்தான் ஆண்டவர் போதித்துவந்தார்" என முந்தி ஒரு நாள் சொன்னீர்களே பாட்டி. இதற்கு உவமையாக என்ன சொன்னார்பாட்டி.

பாட்டி: அதுதானெடி பிள்ளை அவர் சொன்னார், "அத்திமரமும் மற்ற மரங்களும் காய்க்கத் தொடங்குவதைக் கண்டதும் கோடைகாலம் வந்துவிட்டது என்கிறீர்களே! அதுபோல் இவைகள் சம்பவிக்கும்பொழுது உலக முடிவு கிட்டிவிட்டது என்பதை அறிந்துகொள்ளுங்கள்" என்று...

பேத்தி: கோடைகாலம் என்றதும் வாயில் நீர் சுரக்கின்றதுபாட்டி. மரங்கள் எல்லாம் பழங்களுடன் அழகாகக் காட்சிதரும். இன்னுமோர் [illegible] பழம் பறிப்பவர்கள் [illegible]க் கூடைகளில் நிரப்பிக்கொண்டு பழுதடைந்த பழங்களை எறிவார்கள். எறியப்பட்ட பழங்களைக் குருவிகள் இறாஞ்சி எடுத்துக்கொண்டு தம் கூட்டிற்குச் செல்லும்.

பாட்டி: அது தானே எங்கள் ஆண்டவரும் உலகமுடிவிற்கு உவமையாகக் கோடைகாலத்தை நினைப்பூட்டி இருக்கிறார்.

பேத்தி: ஏன் பாட்டி அப்படிச் சொல்லுகிறீர்கள்,

பாட்டி: என் செல்வமே! கவனமாய்க்கேள். மரங்கள் பழுக்கும்வரை மனிதர் காத்திருந்து பழுத்தவுடன் பறித்து நல்லவற்றை எடுத்துக்கொண்டு அழுகியவற்றை எறிவதுபோல், எங்கள் ஆண்டவரும் உலகமுடிவில் நல்லவர்களை ஆசீர்வதித்துத் தம்முடன் அழைத்துக்கொண்டு பாவிகளைச் சபித்துவிடுவார். எறியப்பட்ட பழங்களைப் பட்சிகள் இறாஞ்சிச் செல்லுவதுபோல் சபிக்கப்பட்டவர்களின் ஆத்துமங்களைப் பசாசுகள் நரகத்திற்கு இழுத்துச் செல்லும்.

பேத்தி: அப்படியானால் தீர்வைநாள் மிகவும் பயங்கரமான நாள் அல்லவா? பாட்டி!

பாட்டி: இல்லை. என் கண்ணே! பாவிகளுக்குத்தான் அது பயங்கரமானதாய் இருக்கும். ஆனால், நீதிமான்கள் ஆண்டவரைக்காண ஆவலுடன் காத்திருப்பார்கள்.

பேத்தி: சரிபாட்டி. ஆகமனகாலம் தொடங்கிவிட்டது என்கிறார்களே! அது என்ன பாட்டி.

பாட்டி: முன்பு அதாவது கிறிஸ்துநாதர் பிறக்குமுன்; பழைய ஏற்பாட்டின் மக்கள் "மெஸியாவின் வருகையை" ஆவலுடன் எதிர்பார்த்திருந்து அதற்கு ஆயத்தமாகத் தபம் செபதபங்கள் செய்துவந்தார்கள். அதை எங்களுக்கு நினைப்பூட்டும்படி திருச்சபை 'நத்தால்' திருநாளின் ஆயத்தகாலமாக ஏற்படுத்தியிருக்கும் நான்கு வாரங்களையும் "ஆகமனகாலம்" என்கிறோம்.

பேத்தி: இப்பொழுது நாங்கள் ஆண்டவரின் பிறப்பை எதிர்பார்த்திருக்க வேண்டியதில்லையே பாட்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் அக்கண்ணீர்?

தமிழாக்கம்: "எம்மா"

**மற்றப்பெண்களைப்போன்றுதான் நானும், நான்நேசிக்கும் ஒருவரோ, அல்லது ஒருபொருளோ என்னிடமிருந்து பிரிக்கப்படுவதையிட்டு அழுதேன். இது நான் என் மரியசெல்வத்தின் பாக்கியமான எதிர்காலத்தையிட்டு மகிழத்தவறிவிட்டேன் என்பது அர்த்தமல்ல. என் மரியசெல்வம் உன்னதமான பாக்கியத்தைத் தெரிந்துகொண்டாள்.**

அம்மடத்தின் வாயிலில் நாங்கள் எல்லோரும் கூடிநின்றோம். இன்னும் சிலநிமிடங்களில் மரியசெல்வத்தை விட்டுப் பிரியப்போகின்றோமே என்ற நினைவு எல்லோருக்கும் விசேஷமாய்ப் பத்துமாசம் சுமந்துபெற்று, அருமைப் பெருமையாய்த் தாலாட்டிச் சீராட்டி வளர்த்தவளாகிய எனக்கு ஆறுத்துயரை அளித்தது. இத்தன்மையே வீட்டார் என் கண்களிலிருந்து பெருகிய கண்ணீருக்கு அணைகோல முடியவில்லை; அழுதுவிட்டேன். இப்பிரிவு வேதனையானது நாங்கள்கொண்டிருந்த ஐக்கியத்தை—பாசத்தை அதிகரிக்கச் செய்யலாயிற்று. என்னைப்பற்றியும், என்குடும்பத்தைப்பற்றியும் ஓர்வித பெருமித எண்ணத்தையும் என்னுள் எழுப்பிவிடலாயிற்று.

நேரமும் விரைவாகப் போய்க்கொண்டிருந்தது. நாங்கள் போய்ச்சேரவேண்டிய இடமோ—அதாவது எங்கள் ஊர் வெகுதொலைவில் இருந்ததாதலின் என்கணவர் சற்றுக்குச்சற்று எம்மைத் துரிதப்படுத்திக்கொண்டிருந்தார். என் கண்களிலிருந்து கண்ணீர்பெருக, பாசம் மேலோங்க, கடைசித்தடவையாக என் கண்மணியைநோக்கினேன். அடுத்தகணம் அவள் என் அணைப்பிற்குள் வந்து வீழ்ந்தாள். அவளின் சகோதரிகள் இருவாரும் கண்ணீரைக் கட்டுப்படுத்த முடியவில்லையாதலால் அவர்களும் எங்களுடன்சேர்ந்து அழுதனர். காரைநோக்கிச்சென்ற என்கணவர் முகத்தில் குளப்பம்மேலிட திரும்பி வருவதை என்கண்கள் கண்டுகொண்டன. நான் எதைச்சமாளிக்க முயன்று தோல்வியுற்றேனோ, அவர் அதைச் சமாளிக்க அரும்பாடுபடுகிறார் என்பதையும் உணர்ந்துகொண்டேன். நாங்கள் போகாவிடில் அவரும் விரைவில் எங்களுடன்வந்து சேர்ந்துவிடுவாரென்ற அச்சம் மேலிட, என் கண்மணியிடமிருந்து விடைபெற்றுக்கொண்டேன். அவளும் மடத்தின் சுவர்களுக்குள்நின்று தன்கரங்களைக்கூப்பி விடைதந்தாள். என்கண்கள் இரண்டிலும்நின்று வழிந்தோடும் கண்ணீரைத் துடைத்தவண்ணம் காரைநோக்கிச் செல்லலாயினேன்.

செல்வத்தின் தேவஅழைப்பு எங்களுக்கு அதிர்ச்சியை உண்டாக்கக்கூடிய காரியமல்ல. காரணம் நானும் என்கணவரும் சேர்ந்து செல்வத்திற்காகச் செபித்திருக்கிறோம். அப்படியிருக்க இப்பொழுது ஏன் நான் கண்ணீர் விடுகின்றேன்? எங்கள் காரெமது இல்லத்தையடையுமட்டும் இதைப்பற்றியே சிந்திக்கலாயினேன். எங்கள் இருவரினதும் ஏகோபித்த வேண்டுதல் கேட்கப்பட்டதையிட்டு இருவருமே களிபேருவகை கொண்டோம். உலககவலையற்று, உல்லாசமாய்த்திரிந்த இச்சிறுமி இப்பொழுது ஆண்டவருடையவள்; எப்பொழுதும் அவருடையவளே. இச்சிறுமி ஆண்டவரின் அழைப்பிற்குச் செவிசாய்த்தாள் என்ற இவ்வுன்னத செய்தியை முழுஉலகிற்கும் சங்கநாதம் செய்து அறிவிக்கவேண்டும்போல் இருந்தது. இப்பாக்கியம் கிடைத்ததையிட்டு மகிழவேண்டியிருக்க ஏன் கண்ணீர் விட்டேன்?

ஆண்களைப்போன்று பிரிவினுல் அதிகம் பாதிக்கப்படாதவர்கள் அல்ல பெண்கள்; நிலைமையையும், அமைதியையும் நாடும் சுபாவமுடையோர்; அதற்கு நான் விதிவிலக்கல்ல. மரியசெல்வம் என்னிடமிருந்து பிரிக்கப்படுகின்றாளேஎன்று நான் அழவில்லை; பெண்மைக்கே இயல்பாயுள்ள இத்தன்மையினுல்தான் அழுதிருக்கவேண்டும். அத்துடன் ஒரு பெண்ணானவள் பிறரைச்சார்ந்தே எப்பொழுதும் இருக்கவேண்டியவள். அதேதருணம் பிறரும் அவள் பாமரிப்பில் இருக்கிறார்கள். அவள் தன்னைச்சார்ந்தவர்களுக்காக எத்தகைய சிலுவையையும் மனச்சந்தோஷத்துடன் ஏற்கக்கூடியவள். அதனுல்தான் பிரிவுஎன்ற சிலுவை எனக்குமுன் நின்றாலும், மரியசெல்வம் தன் அன்பருடன் விசேஷித்தவிதமாய் நெருங்கியிருப்பதையிட்டு மிகவும் மகிழ்ந்தேன். ஆனுல் அவளுக்கு நேரிடக்கூடிய கஸ்தி சஞ்சலங்களில் அவளுக்கு ஒரு உற்ற துணையாயிருக்கமுடியாதே என்றுதான் சிறிதுயோசித்தேன். ஆணைப்போன்று பெண் பிரிந்துசெல்லும் தருணங்களில் காங்களைக்குலுக்கிவிட்டு அவரவர் வழியைப்பார்த்துக்கொண்டு போகமுடியாது. சேயின் வாழ்க்கையில் தாயும் உயிர்நாட்டம், துடிப்பு என்பவைகளைக் கொண்டிருக்கின்றாள். உலகத்தின் கடைக்கோடிக்குச்சென்றாலும், தாயும்சேயும் முழுமையாகப் பிரிக்கப்படுவதில்லை. ஆனுல் ஒரு கன்னிகையின் தாயோ தன்சேயிடமிருந்து நித்தியத்திற்குமேபிரிக்கப்படுகின்றாள்.

துறவற அந்தஸ்து எவ்வளவுதான் பாக்கியம் நிரம்பியதாயிருந்தாலும், உந்தமான தாயிருந்தாலும், ஒருபெண்ணைக் கன்னிகையாகவோ, பிள்ளையைக் குருவாகவோவா அனுமதிப்பது ஒரு தாய்க்கு இலேசான காரியமல்ல. என்றாலும் இத்தகைய பாக்கியம் தங்கள் பிள்ளைகளுக்குக் கிடைத்தும், அவர்களை அனுமதியாத பெற்றோரை என்னென்பது? மரிய செல்வத்தின் பிரிவையிட்டு அழுதேன்தான். ஆனுல் மரியசெல்வமோ, அல்லது வேறு எந்தப் பெண்ணோ தன் தெய்வீக அழைப்பைப புறக்கணித்துவிட்டுத் திரும்பி வருவாளேயானுல் மிகவும் வருத்தமடைவேன். ஆனுல் கடவுளுக்குச் சித்தமில்லாத ஒரு அந்தஸ்தில் பிரவேசிக்கும்படியும் வற்புறுத்தமாட்டேன்.

என் செல்வங்களில் வேறு எவருக்காகிலும் இவ்வழைத்தல் கிடைத்திருந்தாலும் இப்படித்தான் அழுதிருப்பேன். எனது மூத்தபெண் தனிக்குடித்தனம் நடத்தச்சென்ற சமயம் அழுதேன். மகன் கலியாணத்தின் போதும் அழச்செய்தேன். மரியசெல்வத்தை விட்டுப்பிரியும்நேரம் நான் அழுதாலும் என் இருதயத்தின் அடித்தளத்தில் ஒருவித புதுஇன்பம் ஊற்றெடுப்பதையும் உணரலாயினேன். இப்பொழுது அவளைப்பற்றிய எள்ளளவேனும் கவலை எனக்குக்கிடையாது. அதனுல் மனச்சமாதானம் எண்பாக்கியமாயிருக்கிறது. அவள் இப்பொழுது சங். சகோத[illegible] ஒவ்வொரு நாளின் ஒவ்வொருகணமும் அவள் [illegible], சிரேஷ்டர்களினதும் பாமரிப்பில் இருக்கின்றாள். ஒரு கன்னிகையின் தாயாயிருப்பது எத்துணை பாக்கியம் என்பதை உலகத்திலுள்ள ஒவ்வொரு தாய்க்கும் சொல்லக்கூடியதாயிருந்தாலோ!

(தொடர்ச்சி அடுத்தபக்கம்)

பாட்டி: ஆண்டவரின் பிறப்பை நாங்கள் எதிர்பார்த்திருக்கவேண்டியதில்லைத்தான் என் தபமணியே! ஆனுல், ஆண்டவரின் இறுதி வருகைக்காக—தீர்வை நாளுக்காக நாங்கள் எங்களை ஆயத்தப்படுத்திப் புண்ணிய சீவியம் சீவித்துவரவேண்டுமல்லவா?

பேத்தி: ஆமாம் பாட்டி. இல்லாவிடில் நரகத்திற்குப் போகவேண்டியதுதான். தூங்கிவிழுகிறீர்களே பாட்டி! படித்துக்கொள்ளுங்கள் நான் போகிறேன்.

# ஓடும் நதியினிலே....
## ஒருத்தி மட்டும் கரையினிலே....

### பாக்கியவதி நான் பாரினிலே மகாபாக்கியவதி...

"அழிவதும் பெண்ணாலே" என்பதை உண்மையாக்கினுள் ஏவாள். இறைவன் இட்டகட்டளையை மீறினுள். தன் சந்ததியினர் அனைவருக்கும் அவள் விதைத்துவிட்ட வித்துக்கள் ஜென்மப்பாவமும், பாவச் சார்புமே. அழிந்துபோன மனுக்குலத்தை மீட்கச் சித்தங்கொண்டார் இறைவன். இரட்சரை அனுப்புவதாக வாக்குப்பண்ணினுர். மாசுமறுவற்ற இரட்சகர் யாரிடம் உதிக்கமுடியும். பாவம்நிறைந்த மனுத்தாய்களிடமிருந்தா? முடியாதே. தெய்வ வல்லமை மரியாளை ஜென்ம மாசணுகாமல் உற்பவிக்க விழைந்தது. செயலாக்கியது. உலகில் உள்ள மற்றெல்லாப் பெண்களிலும் பார்க்கப் "பாரினிலே நான் மகாபாக்கியவதி" என்று சொல்லக்கூடியவளானுள். அவளே பாவமெனும நதியினில் மூழ்காதுகரையினிலே தனித்துநின்று கலங்கரை விளக்கமானுள்.

### காத்திருந்தாள் காத்திருந்தாள் காலமெல்லாம் காத்திருந்தாள்...

இப்போது பன்னிருவயதுப் பருவமங்கை அவள் தேவாலயக்குருக்களின் கருததிற்கிணைந்து சூசையப்பரை மணவாளனுக ஏற்றுக்கொள்கிருள். தம் கன்னிமையை இறைவனுக்கர்ப்பணித்த இருவருமே இல்லறப் பூங்காவில் துறவறமாற்றுகின்றனர். கன்னிமரியாள் உள்ளத்தில் ஒரேயொரு ஆசை. வாக்குப்பண்ணப்பட்ட இரட்சகர் விரைவில் பிறக்கவேண்டும். அவரது அன்னையாகும் பேறுபெறும் பெண்மணிக்கு தான் குற்றேவல் செய்யவேண்டுமென்பதுதான் அது. தம்மிடத்தே இரட்சகர் பிறந்தாலோ என்று யூதேயாப் பெண்மணிகளெல்லாம் "பெருமை" எனும் நதியில் மூழ்கிக் கொண்டிருந்தனர். ஆனுல், மரியாளோ "தாழ்மை" எனும் கரையிலே தனியளாக நின்றுகொண்டு செபத்துடன் காத்திருந்தாள். இறைவனே தாழ்மையானவளைத் தயாபரமாய் நோக்கினுர். தூதனை அவளிடம் அனுப்பினுர். மனித அவதாரத்தின் பாமஇரகசியத்தைத் தெளிவுபடுத்தினுர். காலமெல்லாம் காத்திருந்தவளிடமே தனியாக அவதரித்தார் யேசு.

### முத்தான முத்தல்லவோ உலகில் வந்த முத்தல்லவோ!

பெத்தலேமின் மாட்டுக்கொட்டில் புறம். தன்னந்தனியாக இரட்சகரின் வருகைக்கு ஆயத்தமாகிருள் அன்னை மரியாயி. வானதூதர் கீதமிசைக்கின்றனர். மரியாயின் கன்னிமைக்குப் பங்கமின்றி உதித்துவிட்டார் முழுமுதற் கடவுள். "நீ கஷ்டப்பட்டு பிள்ளைகளைப் பெறுவாய்" என்பது பெண்குலத்தின் சார்பாக ஏவாளுக்கு இடப்பட்ட தண்டனை. மரியாளோ அதற்கு விதிவிலக்கு. பெற்றெடுத்திருப்பதும் யாரை? உலகிலுள்ள சகல குழந்தைகளின் மாசற்றதன்மை, அழகுசௌந்தர்யம் அத்தனையையும் இணைத்தாலும் அதிலும் பன்மடங்கு அழகான மாசற்ற தெய்வக்குழந்தையை. மூவுலகுக்கும் இறைவனையல்லவா? கஷ்டமென்ற நதியில் மூழ்கி உலகின் பாவஅக்கிரமங்களில் மூழ்கும் மனிதசந்ததியை உருவாக்குகின்றனர் இவ்வுலகப்பெண்கள். ஆயின், கற்புநெறிக கரையிலே இறைவனையே ஈன்றுவிட்டாள். "முத்தான முத்தல்லவோ உலகில் வந்த முத்தல்லவோ" என்று தாலாட்டுகிறாளே மரியாயி. இப்பேறு வேறு யாருக்குக் கிடைக்கும்?

### ஊருக்கும் தெரியாது யாருக்கும் தெரியாது

நசரேத் வீட்டினுள் நுழைவோம். அடுக்களையில் உணவு தயாரிக்கிருள் மரியாயி. பத்தாவுக்கும், மைந்தனுக்கும் பரிமாறுகிருள். சூசையப்பரது வேலைத்தலத்தை துப்பரவு செய்கிருள். நூல்நூற்கிருள். பறவைகளுக்கு உணவூட்டுகிருள். கிணற்றிலிருந்து நீர் மொண்டு ஊற்றுகிருள். சிறிய பாலனைத் தாலாட்டுகிருள். தூங்க வைக்கிருள், கூடியநேரம் செபத்தில். மிகுதிநேரம் பாலன் சேவையில். அவள் வாழ்க்கையோ அந்தரங்கமானது. அங்கே நிறைந்து விளங்குவதோ விபரிக்கமுடியாத பேரின்பம். மற்ற யூதேயாப் பெண்மணிகளைக் கவனிப்போம். கிணற்றடிக்கு நீர்மொள்ள வருகிருர்கள். உலக விவகாரம் என்னும் நதியில் பேச்சு ஓடுகிறது. வீட்டுக்குத் திரும்பினுலும் அந்நதியின் அலைகள் உள்ளத்தில் அடிபடுகிறது. ஆனுல், மரியாளோ அந்தரங்க வாழ்க்கை என்னும் கரையிலே நின்றுகொண்டு அடையும் மோட்சபேரின்பமோ ஊருக்கும் தெரியாது, யாருக்கும தெரியாது.

### பூலோக மேலோக ராஜேஸ்வரி நமோ!

மரியாயின் 72-ம்வயது. மரணப்படுக்கையில் கிடக்கிருள். இறைவனிடம் சேரத் துடிக்கிருள். ஆவிபிரிகிறது மூன்ரும் நாள். உலகில் வேறெந்தப் பெண்ணுக்கும் கிட்டாத பாக்கியம். ஆத்துமத்துடனும், தனது இவ்வுலக சரீரத்துடனும் ஆரோபணமாகிருள். எதிர் கொண்டழைப்பது யாரோ? பரமதிரீத்துவமே மணிமகுடத்துடன் எதிர்கொள்கிருர்கள். வானவர் பூலோக் மேலோக ராஜேஸ்வரி நமோ "எனக்கீதமிசைக்கின்றனர். பசாசுகள் கிடுநடுங்குகின்றன. சர்வாலங்கார பூஜிதையாய், பரலோக பூலோக அரசியாய் மோட்சஉலகில் வீற்றிருக்கிருள் நம் அன்னை. பாவக்கடலில் தத்தளிக்கும் நம்மையும் கரைசேர்க்க கைநீட்டிக் [illegible]கொண்டே இருக்கிருள் அல்லவா?

(தேவதாயின் வாழ்க்கைச் சித்திரம்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரைக்குப் பின்னல்

**ஒலிவர் கனகசுந்தரி**

மாதா கோவில் மணி ஐந்தடித்து ஓய்ந்தது. யூலியட் பரபரப்புடன் எழுந்து சாளரத்தினூடே கிழக்கே நோக்கினள். இருளை முறியடித்துக்கொண்டு காலைக் கதிரவன் மலைப்பிரதேசத்தில் பரமிக்கும் சூழ்நிலையை மனோகரமாக்கினன். உறங்கியெழுந்த பறவைகளின் சப்தம் எங்கும் ஒலித்தது. மலைகளில் படிந்த பனிப்படலங்கள் தம் பகைவனை பகலவனின் ஆர்ப்பாட்டத்தைக் கண்டு பின்வாங்கி உருகி ஓடின. மலைமுடி பகலவனின் வரவைக் கண்டு கோபத்தால் சிவந்தது. இயற்கையின் இன்ப மானவனப்பில் மனதைப்பறிகொடுத்த யூலியட் திடீரெனத் தன் இதயத்தின் அடித்தளத்தில் இருந்து கிளம்பிய இறையன்பால் தூண்டப்பட்டு, காலைச் செபத்தைமுடித்து, அன்னைமரியையும் வணங்கிவிட்டு அடுக்களைக்குச் சென்று கெருப்பைப் பற்றவைத்து, நீரைக் கொதிக்கவிட்டாள்.

நேரம் 5-15 ஆயிற்று. யூலியட் காப்பியைக் கையிலேந்திக்கொண்டு ஜோனின் அறைக்குள் நுழைந்தாள். படுக்கையைவிட்டு எழுந்து, காலைக் கடன்களை முடித்துக்கொண்ட ஜோண் யூலியட்டிடமிருந்து காப்பியை வாங்கிப் பருகினன். யூலியட் காலைஉணவு தயாரிப்பதற்குச் சமையலறைக்குள் நுழைந்தாள்.

* * *

யூலியட்டும், ஜோனும் யோசவ் தம்பதிகளின் இருசெல்வங்கள். ஜோசவ் தம்பதிகள் யூலியட்பிறந்து பத்து வருடங்களின்பின் காலமாயினர். குடும்பப்பாரம் பாவம், 15 வயது ஜோனின் தலையில் விழுந்தது. அதன் விளைவு கண்டி, "குயின்ஸ் ஹோட்டல்" சமையற்காரனாக அவனை மாற்றியது காலம். தான் கல்விகற்காவிட்டாலும் தங்கை யூலியட்டைப் பட்டதாரியாக்கவேண்டுமென விரும்பினன். தன் விருப்பத்திற்கேற்ப இலவசப் பாடசாலையில் கல்விகற்ற பத்துவயதுப்பாலிகை யூலியட்டை தனக்குக்கிடைக்கும் சொற்ப சம்பளத்துடன் 'நல்லாயன்' பாடசாலையில் சேர்த்தான். பள்ளிச் செலவு அவனை மேலும் வறுமைக்கடலில் ஆழ்த்தியது. வருடங்கள் உருண்டோடின. பத்து வயதுப் பாலிகை பதினேழுவயது வாலையாளுள்.

* * *

சமையலறைக்குள் நுழைந்த யூலியட் மனநிம்மதியற்றவளாகக் காணப்பட்டாள். கல்வியிலுள்ள அசட்டையினலா? இல்லை. தன் தமையனர் தனக்காகப்படும் கஷ்டத்தைநினைத்தா? ஓரளவு தன்தமையனின் கவலை இருந்தாலும், அவளை உண்மையாக வாட்டி வருத்தியது தன்னுடன் கல்விபயிலும் றெபேட்டின்நினைவே. ஆம், றெபேட் யூலியட்டைக் காதலித்தான். ஆனல், யூலியட்? தன்னை யேசுவுக்கு அர்ப்பணித்துவிட்ட யூலியட் இதை வெறுத்தாள். இதற்கிடையில் ஜோண் தன் தங்கைக்கு ஒரு மணாளனைத்தேடி அவளுக்கு மணம்செய்வித்து, அவள் சந்தோஷத்துடன் சீராய் வாழ்க்கைநடத்துவதைக்காண விரும்பினன். அவன் யூலியட்டின் உள்ளத்தை அறியவில்லை. காலமும் சக்கரம்போல் சுழன்று சென்றது.

* * *

காலை எட்டுமணி. யூலியட் காலை உணவுஉண்டதும் கலாசாலைக்குச் செல்வதற்காக ஹாஸ்டலைக் கடந்துவந்தாள். யூலியட்டைக் காத்திருந்த றெபேட் அவளைப் பின்தொடர்ந்தான். "குட் மார்னிங் மிஸ் யோசப்" என்று கூறினன் றெபேட். யூலியட் கேட்டும் கேளாததுபோல் முகத்தைத் திருப்பிக் கொண்டுநடந்தாள். "யூலியட்" என்று அழைத்தான் றெபேட். பதிலில்லை; மௌனமாகவே சென்றனர் இருவரும். யூலியட் வழியில் தன் சகமாணவிகளுடன் யேசுபெருமானின் தேவாலயத்துள் நுழைந்தாள். றெபேட்டும் பின்தொடர்ந்தான். யூலியட்டின் கண்கள் கன்னிமரியாயின் படத்தைப் பார்த்ததுமே தாரைதாரையாய்க் கண்ணீர் பொழிந்தன. 'அன்னையே உம் திருக்குமாரனுக்கே என்னை அர்ப்பணித்துவிட்டேன். றெபேட்டிடமிருந்து என்னைக் காப்பாற்றியருளும், யேசுவின் குமாரத்தியாக ஆக்கியருளும்" என மனம்உருகவேண்டினள். யூலியட் கண்ணீர் பெருக்குவதைக் கண்ட றெபேட் அவளுக்காக அவள்கேட்ட விண்ணப்பத்தைத் தாயார் ஏற்றுக் கொள்ளவேண்டுமென்று மன்றாடினன். ஆனல், அவள்கேட்ட விண்ணப்பத்தை இவன் அறிவானா? செபத்தை முடித்துக்கொண்டு திரும்பிய றெபேட் கலாசாலை போய்ச்சேர்ந்தான். யூலியட்டும் மரியாயிடம் மன்றாடிக்கொண்டு கலாசாலைக்குச் சென்றாள்.

கலாசாலையில் இராசாயன இலக்சரர் படிப்பித்துக் கொண்டேபோனர் அவர்பேசியவை ஒன்றும் றெபேட்டின் காதில் விழுந்ததாகத் தெரியவில்லை. பாடம்முடிவுற்றது. உணவிற்காக இடைவேளை விடப்பட்டது. மகோக்கனி மரத்தின்கீழ் சிமேந்து பெஞ்சின் மீது உட்கார்ந்துகொண்டு இரசாயன புத்தகத்தை வைத்துக்கொண்டு மண்டையை உடைத்துக்கொண்டிருந்த யூலியட்டை கூப்பிட்டுக்கொண்டே அருகில் வந்தான் றெபேட். "என்ன வேண்டும்" என்று மிடுக்குடன் கேட்டாள் யூலியட். அதில் தொனித்த கடுமையைக் கண்டு பின்வாங்கினன் றெபேட். பின்னர் துணிவுடன் "நான் உங்களுடன் சிறிதுநேரம் பேசவேண்டும்" என்றான்.

"அப்படி என்ன பேசவிருக்கிறது?"

"யூலியட் தயவுசெய்து என்னைக் கடுமையாகப் பேசாதீர்கள்."

"என்ன பேசவேண்டும்?"

"நீங்கள் உங்கள் கோபத்தைத் தணித்தால் நான் பேசுவேன்."

"சரி" என்று அமைதியாகக் கூறினள் யூலியட்.

"நான் உங்களை மணம்செய்யவிரும்புகிறேன். உங்கள் அண்ணாவிடமும், என் பெற்றோரிடமும் சம்மதம் கேட்டுவிட்டேன். இப்போது உங்கள் சம்மதத்தைப் பெறவே வந்தேன்" என மொழிந்தான். யூலியட் சாட்டையடி பெற்றவள்போல் திடுக்கிட்டாள்.

"ஆ!" என்ன?" என்று அழுகையுடன் கேட்டாள்.

"ஆம் உங்களுக்குப் பரீட்சைமுடிந்தவுடன் கல்யாணம், கல்யாணத்தேதியும் குறித்தாயிற்று" என்று மேலும் கூறினன் றெபேட்.

"முடியாது, முடியாது இதுபொய்; நான் நம்பமாட்டேன். நான் யேசுவினுடையவள். உங்களை மணம்செய்து கொள்ளமுடியாது நான் என் வாழ்வைக் கன்னியாஸ்திரிகள் மடத்தில செலவிட்டு யேசுவினுடையவளாய் நடக்கவே விரும்புகிறேன்" என்று கூறினள்.

"ஆ! நீங்கள் கன்னியாஸ்திரியாக வரப்போகிறீர்களா?"

"அதில் சந்தேகம் என்ன? நான் கன்னியாஸ்திரியாகவே வர ஆசைப்படுகிறேன். என் ஆசையில் மண்ணைப் போட்டுவிடாதீர்கள்" என்று கதறினள். றெபேட்டின் விழிகளில் ஏளனம் தாண்டவமாடிற்று.

"நீங்கள் என்னை மணம்செய்துகொள்ள மாட்டீர்களா?" என ஏளனமும், கோபமும் போட்டியிடக் கேட்டான் றெபேட்.

"நீங்கள்என்னை மணம்செய்யாவிடில் உங்கள் அண்ணாவை வேலையில்நின்று நீக்கும்படி என தந்தையிடம் கூறிவிடுவேன்" எனப் பயமுறுத்தினள்.

ஆம், அவன் தந்தையே "குயின்ஸ் ஹோட்டலின் உரிமையாளர்.

"ஐயோ வேண்டாம் அப்படிச் செய்துவிடாதீர்கள்" என்று கெஞ்சினள் யூலியட்.

"அப்படியானல் நீங்கள் என்னை மணம்செய்துகொள்ளவேண்டும்"எனக் கடுமையாக மொழிந்தான் றெபேட். தை நினைத்துத் துக்கப்பட்டேன்.

இருதலைக் கொள்ளி எறும்புபோல ஆன யூலியட் செய்வது இன்னதென்று அறியாது அவ்விடத்தைவிட்டுச் சென்றுவிட்டாள்.

கலாசாலையில் நின்று வீடுதிரும்பிய அவள் கோவிலுக்கு நேரேசென்று நற்கருணைநாதர்முன் மண்டியிட்டு, "யேசுவே! என் அன்பரே! நான்உம்முடையவளாக வாழவே ஆசைப்படுகிறேன். என்னை இவ்விக்கட்டில் நின்று காப்பாற்றியருளும்" எனப் பிரார்த்தித்துவிட்டு வீடுசென்றாள்.

* * *

ஜோண் சந்தோஷத்துடனும், ஆர்வத்துடனும் தன் தங்கையின் கல்யாணத்திற்கு ஏற்பாடுசெய்தான். றெபேட்டின் பெற்றோரும் கல்யாணத்திற்கான ஏற்பாடுகள் செய்தனர். யூலியட்டோ திருமணத்தேதி நெருங்க நெருங்க கவலையினல் இளைத்துவந்தாள். தன்னை யேசுபெருமான் கைவிட்டுவிட்டாரே என எண்ணியெண்ணிக் கலங்கினள். மணநாளை மரணநாளாகவே மதித்தாள்.

மாலை ஆறுமணி யளவிலிருக்கும் யூலியட் யேசுவின் திருஇருதயச் சுரூபத்திற்குத் தீபமேற்றியபின் அதற்குமுன் அவ்வறையில்முழந்தாளிட்டு இருகைகளையும் கூப்பியவண்ணம் திருஇருதயநாதரைப் பிரார்த்தித்த வண்ணம் பரவசத்தில் ஆழ்ந்திருந்தாள், வாசலில் ஓர் உருவம் இதை உற்றுக்கவனித்துக்கொண்டிருந்தது. அவ்வுருவம் வேறு யாருமில்லை றெபேட்டேதான். றெபேட்டும் யூலியட்டருகே சென்று கைகளைக்கூப்பி, கண்களைமூடிக்கொண்டு யூலியட்டுடன் சேர்ந்து பிரார்த்தித்தான். யூலியட் மூடிக்கிடந்த இமைகளைத்திறந்தாள். எதிரே றெபேட் கடவுளைப் பிரார்த்தித்தவண்ணம் இருந்தான். சற்றுப் பின்வாங்கினள் அவள்.

"சீற்றங்கொள்ளாதே யூலியட். என் அகக்கண்களை மறைத்திருந்த திரை விலகியது. யான் இதுவரைசெய்தது அநியாயம் என்று உணர்ந்தேன். உனது வாழ்வைக்குலைக்க எண்ணிய சகோதரியே என்னை மன்னித்துவிடம்மா" எனப் பாசத்துடன்மொழிந்தான்யூலியட்.

"அண்ணா உங்களை இதுகாறும் இகழ்ந்து பேசியதற்கு மன்னியுங்கள். என்னை மன்னிக்கமாட்டீர்களா?"

"நான் மன்னிக்க நீங்கள் செய்த குற்றம்தான் என்ன?"

"சரி, அப்படியானல் என் அண்ணாவிடம்கூறி நான் கன்னியாஸ்திரிமடத்தில்சேர வழிசெய்யுங்கள்".

"ஆம் தங்கையே" என றெபேட் உறுதிமொழி கூறினன்.

* * *

அண்ணா நான் கடைசியாகக் கேட்பது ஒன்றுதான். உங்கள் திருமணத்தூது ஒன்றை எனக்கு அனுப்பிவிடவேண்டும்."

"நான் மணம் செய்துகொள்ளப் போவதில்லை. யேசுவின் அடியானகச் சமூகசேவை செய்துவாழவே விரும்புகிறேன் யூலியட்."

"அண்ணா" எனக் கத்தினள் யூலியட்.

"யூலியட், கார் வந்துவிட்டது தயாராகுங்கள்".

"அண்ணா போய் வருகிறேன்"

"போய்வாருங்கள் சகோதரி" என்று கூறினன் றெபேட். யூலியட் காரில் ஏறினள். கார் கன்னியர் மடத்திற்குக் கன்னியாஸ்திரியாக வரப்போகும் யூலியட்டைச் சுமந்துசென்றது. கார் போவதையே பார்த்துக்கொண்டிருந்த றெபேட்டின் கண்களை நீர்த்திரை மறைத்தது. அத்திரைக்குப் பின்னல் அவள் கடந்தவாழ்வு மறைந்துகிடந்தது. அவன் அமைதியுடன் வீட்டு வாசலை நோக்கித் தளர்நடைபோட்டான். முற்றும்.

---

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

மரியசெல்வம் சௌக்கியமாய் இருக்கின்றாளா? வைத்திய உதவி தேவையா? செலவிற்குப்பணம் வைத்திருக்கின்றாளா? உளவுக்கு மிஞ்சிய வேலைகளால் நசுக்கப்படுகின்றாளா? என்பதுபோன்ற கவலை கரிசனைகளும் எனக்குக்கிடையா. அவளின் சுய தேவைகளைப் பூர்த்திசெய்ய அவளுட்பட்ட சபை இருக்கிறது. கடவுள் இருக்கிறார். அத்துடன் அவளது அன்றாட செபத்தில் நாங்கள் எல்லோரும் நினைவுகூரப்படுகின்றோமல்லவா?.

உலகத்தை உதறித்தள்ளும் ஒரு பெண்ணிற்கும் அப்பெண்ணைக் கையளிக்கும் பெற்றோர்க்கும் துறவறசீவியமானது பரித்தியாகம்நிறைந்த பலியாயிருக்கிறது. எனது இல்லற வாழ்வு இன்பம் நிரம்பியதே. குடும்பங்களில் ஏற்படக்கூடிய சிலுவைகளுக்கும் துன்பங்களுக்கும் குறைவில்லைத்தான். ஆனல் பதினயிரக்கணக்கான இன்ப நிகழ்ச்சிகளும் உண்டு. ஆனல், அதே தருணம் எங்கள் மரியசெல்வம் எத்தகைய சந்தோஷங்களாலும் வரங்களாலும் நிரப்பப்பட்டிருக்கிறாள் என்பதை உணராத குருடர்அல்ல நாங்கள். அவளது தெய்வீக சந்தோஷம் அவளைச்சுற்றி மகுடமிடுவதை நாம் காண்கின்றோம். அவளது ஆனந்தம் பூரணமானது; அது அவள்இருதயத்தில் நின்றும் நிரம்பி வழிகின்றது.

எம் இல்லறவாழ்வு இன்பமாகக் கழிந்தாலும், எமது இன்பத்திலும் மேலான இன்பம உண்டென்பதும் நமக்குத்தெரியும். மரியசெல்வம் இம்மேலான தெய்வீக உன்னத இன்பத்தைத் தனதாக்கிக்கொண்டதையிட்டுப் பூரிப்படைந்தோம். எனக்கும் என்கணவருக்கும் சங்கீதத்தில் ஆர்வம், நாட்டம் என்பன உண்டு, ஆனல் திறமைதான் இல்லை. திறமைகளுடன் கூடிய ஒருமகவு நமக்கு இருக்குமேயானல், அம்மகவு சங்கீதத்துறையில் முன்னேறுவதற்குச் சகல ஏற்பாடுகளையும் செய்து கொடுப்போமல்லவா? இத்தகைய உயர்திறமைக்கு நாம் ஏற்றவர்கள் இல்லையானலும் எங்கள் பிள்ளைகளில் ஒருவருக்கு இத்திறமை கிடைத்ததையிட்டு மகிழத்தானே செய்வோம். இதேபோன்றதுதான் தேவ அழைத்தலும். நம் செல்வங்களுள் மரியசெல்வத்திற்குத்தான் இத்தகைய பாக்கியம் கிடைத்துள்ளது. நாம் துறவறபாக்கியத்திற்கு அழைக்கப்படவில்லையானல் அப்பாக்கியத்தைப் பெற்றிருக்கும் மரியசெல்வத்தின் ஆசையை நிராசையாகவா செய்வது. எங்கள் பிள்ளைகளைத் தேவன் எங்கு அழைக்கின்றாரோ அவர்கள் அங்குசெல்லவேணுமேன்று தானே ஜெபித்து வந்திருக்கின்றோம். இல்லறமானலும்சரி துறவறமானலும்சரி தங்களுக்குகந்த அந்தஸ்தைத்தெரிய அவர்களை உற்சாகப்படுத்தியிருக்கின்றோம். இப்படி ஊக்கி உற்சாகப்படுத்தியிராவிடில் வாழ்க்கையில் அவர்கள் மகிழ்ச்சியை இழந்தவர்களாக்கியிருப்போம்.

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 10, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Saturday December 1-1962

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org